உ

தமிழ்த்தாய் வாழ்க.

தமிழ்ப் பொழில்.

தஞ்சைக்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்
திங்கள் வெளியீடு.

பிரமாதி ஆண்டு.

(1939—40.)

பதினைந்தாம் துணர்.

பொழிற்றொண்டர்
செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள்

தஞ்சைக்
கூட்டுறவுப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

கட்டுரை எழுதிய திருவாளர்களும், கட்டுரைகளும்.

திரு. வே. வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள்

கம்பர் கவிநயம் 1

,, வித்துவான் பெ. கோவிந்தன் அவர்கள்

தமிழரொழுக்கம் 9

,, T. V. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள்

விநாயகர் வழிபாடும் தமிழ்நாடும் 12

தேவாரப் பதிகங்களிற் குறிக்கப்பெற்ற சிலகோயில்களின் பெயர்க் காரணம் 83

,, அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A.

மாண்டவளு மீண்டான் ? 20

பழமளித்த பாவையார் 245

,, வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள் B.O.L.

வரைமொழியும் வாய்மொழியும் 43

தொல்காப்பியமும் சங்கநூல்களும் 320, 336

,, வித்துவான். ச. குருஸ் அந்தோணி அவர்கள்

பனையரும் இந்திரனும் 50, 91

சுவஸ்திக்கா 177

தமிழ்ச்சொற்களின் விஞ்ஞான அமைப்பு 349

,, ச. க. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள் M. A.

கண்ணகி 58

களுக்குழந்தைகள் 473

,, மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

கல் வெட்டுக்கள் 63

,, வித்துவான். A. கிருட்டினமூர்த்தி அவர்கள்

தொல்காப்பியம் 68

கதம்பர் வரலாறு 114

,, K. சோமண்ணா அவர்கள் B.A., B.L.

எலிமயிர்த்தொழில் 76

திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் M.A., B.L.
தொல்காப்பியரின் புறத்திணை வகைமுறை 95
நீத்தார் யார்? 125
மெய்ப்பாட்டியல் 205, 293, 333, 377

,, ந. மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள்
ஒலிபரப்பில் நிகழ்த்திய சொற்பெருக்கு 103
ஞானியார் பொன்விழா பாராட்டுரை 255
தமிழ்நாட்டின் திருமடங்களும் திருஞானியார் திருமடமும் 436
சுந்தரர் செந்தமிழ் 453

,, J. M. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் B.A., B.L.
சிற்பமும் கலைவாழ்வும் 108
தென்னுட்டுக் காட்சிகள் 161

,, வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்
சதுர்வேதி மங்கலம் 129

,, த. இராமநாதபிள்ளை அவர்கள் B.A. (LOND.)
கலைகளும் வித்தைகளும் 131, 186

,, இ. கோவிந்தசாமிபிள்ளை அவர்கள்
நாட்டு முன்னேற்றம் 140

,, R. பொன்னுசாமிபிள்ளை அவர்கள்
பிராட்டிக்கிராவணன் தொட்டபழியுண்டா? 154, 167,
,, 235, 302, 344

,, K. கோவிந்தன், ஔவைத் தமிழகம்
பொருள் உறுமுறை 183

,, சு. நடேசபிள்ளை அவர்கள் B.A., B.L., M.L.C.
முகப்புப்படம்
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 28-ஆம் ஆண்டுவிழா
,, தலைவர் முன்னுரை 223

,, ம. பாலசுப்பிரமணியமுதலியார் அவர்கள் பி.ஏ., பி.எல்.
கொற்று அட்டி ஆளார் 213

திரு. டி. ஜி. ஆராவமுதன்
தென்னாட்டுக் காட்சிகள் 215

,, வித்துவான் ரே. திருமலை அய்யங்கார் அவர்கள்
பேரறிவாளன் 221

,, சிவ. குப்புசாமி அவர்கள்
வள்ளல் கண்டீரக்கோப் பெருநள்ளி (நாடகம்) 229,
,, 309, 353, 390, 430

,, க. வெள்ளைவாரணன் அவர்கள்
ஞானியார் பொன்விழாப் பாராட்டுரை 267
உயர்திரு ஞானியார் அடிகளாரின் பொன்விழாவில்
கரந்தைத் தமிழ்ச்சங்கத்தார் கூறிய வாழ்த்து 253

,, வித்துவான் வீர. அரங்கன்
ஞானியார் பொன்விழா நிகழ்ச்சி 273

,, நீ கந்தசாமிபிள்ளை அவர்கள்
இலக்கணப்புலவர் ம. நா. சோமசுந்தரப்பிள்ளை
அவர்களின் தமிழ்த் தொண்டு 278

,, T. S. வேலாயுதம்பிள்ளை அவர்கள் B.A., L.T.
கலைச்சொற்கள் 361, 404

,, வே. மு. ஸ்ரீநிவாச முதலியார் அவர்கள்
பிழையுற்ற பாடல்களும் திருத்தங்களும் 365

,, ந. சிவகுருநாதபிள்ளை அவர்கள்
பொங்கல் வாழ்த்து 373

,, பு. வே. தேவராசமுதலியார் அவர்கள்
பொங்கல் வாழ்த்து 374

,, T. K. சிதம்பரநாதமுதலியார் அவர்கள். B.A., B.L.
கம்பரும் மக்கள் இயல்பும் 385

,, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள்
ஞானியார் பொன்விழா பாராட்டுரை 259
வினையுணர்வும் ஞானசம்பந்தரும் 397, 424
மனைகெழு மடந்தை 465

திரு. சி. அருணைவடிவேல்முதலியார் அவர்கள்
காரைக்காலம்மையாரின் கணவன்நிலை 415, 460

,, M. நடேசமுதலியார் அவர்கள்
திருமுருகாற்றுப்படை 441

,, K. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் B.A., B.L.
அறிதோறறியாமை கண்டற்று 478

,, த. வே. உமாமகேசுவரம்பிள்ளை அவர்கள்
செவியறிவுறூஉ 374

உள் அட்டை புலவர் கல்லூரி வேண்டுகோள்
,, கரந்தைக் கட்டுரை வெள்ளிவிழா நினைவுமலர்

பொழிற்றொண்டர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம் 28-ஆம் ஆண்டுவிழா 195
உறுப்பினர் கூட்டம் 199
தமிழ்ச் செய்திகள் 32, 158, 242, 283, 367, 410, 446, 483, 484
புலவர் கல்லூரி 35
ஓர் துயரம் 35
மதிப்புரை 36, 159, 202, 244
புத்தக மதிப்புரை 287, 371, 412, 452
தமிழர் திருமணம் 37
நன்கொடைகள் 41, 161, 203, 244, 288, 332, 372, 413 490
விண்ணப்பம் 42, 81
வரவேற்பு வாழ்த்து 331

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு

துணர் ௩௫ { பிரமாதி, வைகாசி } மலர் ௨

க. வரைமொழியும் வாய்மொழியும் 43
வித்துவான். திரு. மா, இராசமாணிக்கம் அவர்கள் P.O.L.

௨. பனையரும் இந்திரனும் 50
வித்துவான். திரு. ச. குருஸ் அந்தோணி அவர்கள்

௩. கண்ணகி 58
திரு. ச. க. கோவிந்தசாமி அவர்கள் M.A.,

௪. கல் வெட்டுக்கள் 63
திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

௫. தோல்காப்பியம் 68
வித்துவான். திரு. A. கிருட்டினமூர்த்தி அவர்கள்

௬. எலிமயிர்த்தோழில் 76
திரு. K. சோமண்ணா அவர்கள் B.A., B.L.,

௭. விண்ணப்பம் 81
பொழிற்றொண்டர்

செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை, தஞ்சை.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫	பிரமாதி, வைகாசி	மலர் ௨

வரைமொழியும் வாய்மொழியும்

வித்துவான் மா. இராசமாணிக்கம் P.O.L. சென்னை

ஒருபோழ்து எல்லோராலும் பேசப்பட்ட மொழி எழுதப்பட்டவுடன் இலக்கிய மொழியாக மாறிவிடலும், பின் நாளடைவில் அது பேச்சுமொழி மாறுதலால் தனித்து நிற்றலும் மொழியின்பால் இயல்பாக அமைந்துள்ள பண்பாகும். எழுதப்பட்ட காலத்திய சொற்களுக்குரிய பொருள்கள் பிற்காலத்தில் வேறுபடுதலும் இயல்பு. சொற்களும் உருமாறும்; வழக்கொழிந்தும் விடும். இவ்வுண்மைகளைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள், சங்கநூல் உரையாளர்கள் ஆங்காங்குக் குறித்துச் செல்லலைக் காணலாம். 'அழன், புழன்' முதலிய தொல்காப்பியச்சொற்கள் வழக்கு ஒழிந்தன. 'புரத்தல்' என்னும் சங்க காலச் சொல் 'காத்தல்' என்னும் பொருளில் இடம்பெறலாயிற்று. 'புரத்தல் — உண்டி கொடுத்துக் காத்தல்' என்பதே நேரியபொருள். இப்பொருளைக் கன்னட அகராதியிற் காணலாம். இங்ஙனம் பொருள் திரிந்த சங்ககாலச் சொற்கள் நூற்றுக்கணக்கானவை, தெலுங்கு, கன்னட, மலையாள அகராதிகளில் பழந் தமிழ்ச் சொற்கள் பலவற்றுக்கு நேரான பொருளைக் கண்டு மகிழலாம். பல சொற்கள் 'ஒரீஇ, நிறீஇ' என உருக்குறைந்துள்ளன. அவை முறையே 'ஒருவி, நிறுவி' என்று இருத்தற்கு உரியன. இங்ஙனம் அவ்வப்போது உண்டாகும் மாறுதல்களை இலக்கண ஆசிரியர்கள் குறித்து இலக்கிய மொழிக்கும் பேச்சுமொழிக்கும் தொடர்பு உண்டாக்க முயன்றுள்ளனர் என்பதை இலக்கண—இலக்கிய மொழி நுட்பம் உணர்ந்தார் நன்குணர்தல் கூடும். இதனை மேலும் விரித்தல் வேண்டா.

இவ்வேறுபாடு தமிழ்ஒன்றுக்கே என்று கோடல்வேண்டா. 16ஆம்நூற்றுண்டினராகிய 'ஷேக்ஸ்பியர்' நூலில் உள்ளசொற்கள் பல இன்று ஆங்கிலத்தில் வழக்கொழிந்துவிட்டன என்பதைத் தெள்ளத் தெளிவாக 340 பக்கங்கள் கொண்ட நூல் ஒன்றில் R. J. கன்லிப் (Cunliffe) என்பவர் விளக்கியுள்ளார். 'இதனுல் ஷேக்ஸ்பியர் இறந்தகால மொழியில் தம் நாடகங்களை இயற்றினூர் எனப் பொருந்தும்,' என்று அவ்வாசிரியரே கூறியுள்ளதும் கவனித்தற்கு உரியது. இத்துடன், "லாட்டின் எப்படி இறந்த (இலக்கிய) மொழியாகி விட்டதோ அதுபோலவே ஷேக்ஸ்பியர் காலத்திய ஆங்கிலமும் இறந்துபட்டது. என்னை? அம்முறையில் அச்சொற்களைப் பயன்படுத்திப் பேசுவார் இன்று இன்மையின் என்க" என டாக்டர் ஸ்வீட் என்னும் மொழியாராய்ச்சி நிபுணர் தமது 'மொழிகளின் நேரிய தன்மை' என்னும் நூலில் (பக். 228) கூறியிருத்தலையும் நோக்குக.

சொற்களின் எழுத்துக்கள் ஒரே நிலையில் இருப்பினும், அவற்றின் உச்சரிப்பும் தொடர் முறையும் மாறிக்கொண்டே இருக்கும். எடுத்துக் காட்டாக 'இழுத்துக்கொண்டு' என்பது எழுதப்படுவது. இத்தொடரை 'ஈத்துகினு, இஸ்துகினு' எனச் சொல்லுதல் காண்க. இங்ஙனம் உச்சரிப்பு முதலியன கெடுதல் படியாமக்களின் உச்சரிப்பாற்றுன் என்பதை உணர்க. இது நிற்க.

(1) இலக்கிய மொழி (சங்கத்தமிழ்) என்றும் மாறுதல் அடையாதது, ஆனுல் பேச்சு மொழி மாறிக்கொண்டே வரும். (2) 'பொருத்தம்' என்பது இருமொழிகளிலும் முற்றும் வேறுபடும். இலக்கிய மொழியில் பாடிய புலவரோ எழுதிய புலவரோ தம் தமிழ் நடைக்குப் பொறுப்புள்ளவராவர். அவர் இலக்கிய இலக்கணங்களைக் கொண்டு எழுதியிருப்பின், அவரது காலம் மிகப்பிற்பட்டதாயினும் முன்னவர் குழுவில் அவரும் சேர்த்தெண்ணப்படுவார். இந்நிலைமை பேச்சு மொழிக்குப் பொருந்ாது. (3) பேச்சுமொழி இயல்பாகக் குழந்தைப் பருவத்திலிருந்தே வருவது; இயல்பாகப் பேசப்படுவது; ஆனுல், இலக்கிய மொழி ஆசிரியரைக்கொண்டு அறியவேண்டுவது; நூல்கள் வாயிலாக அறியவேண்டுவது; இம்மூன்று காரணங்களால்—இலக்கியமொழிக்கும் பேச்சுமொழிக்கும் உள்ள வேறுபாடுகள் நன்கு விளங்கும்; பேச்சுத் தமிழ் மாறுதல் அடைதற்குக் காரணமும் இலக்கியத் தமிழ் மாறுமைக்கும் காரணமும் நன்கு விளங்கும். இலக்கியத்தமிழ் பேச்சுவழக்கு அற்ற

மையின், அது அழியாது; பேச்சுத் தமிழ் வழக்கில் இருப்பதால் மாறிக்கொண்டே இருக்கும் இயல்பையுடையது. பண்டை இலக்கண இலக்கியங்களைப் படித்துச் சொல்பவர் சொல்லும் வரையிற்றான் அவை பொதுமக்கட்குக் கண்ணெதிரே தோன்றும். இன்றேல் இறந்தவையே ஆகும். பேச்சுத் தமிழில் கருத்தைச் செவ்வனே விளக்க முடியாதபோது 'பண்டைத் தமிழில் இது எங்ஙனம் கூறப்பட்டுளது?' எனப் பார்க்கத் தூண்டும்போதும், பழைய மொழிச் சுவைநுகர அவா உண்டாகும் போதுமே இலக்கிய இலக்கண நினைவு எழும்.

பழைய சங்கத் தமிழ்நூல்கள் அறம், பொருள், இன்பம் மூன்றையுமே சிறப்பாகப் பற்றியவை. இம் மூன்றையும் முறையே நுகர்ந்து வருபவர் வீடெய்தல் கூறல் வேண்டாமையின், பண்டைத் தமிழ்மறையாய திருக்குறளும் இம் மூன்றையே வலியுறுத்துச் சென்றது. அந்நிலையில் பிற்காலத் தமிழர் இராமல் வடமொழி மதவயப்பட்டு உழல நேர்ந்தமையால் சங்கநூல்களைக் கைவிட்டுப் புரோகிதர் சமஸ்கிருத மந்திரங்கட்கு அடிமையாகித் தம்மையே மறந்து, 'மதம்' எனின் 'இந்து மதம்', 'மரபு எனின் நான்கு ஜாதிகள்' என்றெல்லாம் பிதற்றிப் பேதுறலாயினர்; இதன்பயனாய்ப் பண்டை இலக்கியங்களை மறந்தனர்; அறநூல்களைத் துறந்தனர்; தம்மையே மறந்துவிலங்குநிலையில் வீழ்ந்துழலுகின்றனர். போதாக் குறைக்குத் 'தேசபக்தி' என்னும் நோய் பருவமல்லாப் பருவத்தில் தமிழரைப் பற்றியுள்ளது. மொழிப்பற்று அற்ற இடத்தே நாட்டுப் பற்று உண்டாதல் எங்ஙனம்? மொழிப்பற்றைக் கொள்வதை விடுத்து இயற்கைக்கு மாறுபட்ட நெறியில் தமிழர் நாட்டுப் பற்றைக் கொண்டுள்ளனர். அதுதானும் உதட்டளவிற்றான். என்னை? 'தாய்மொழிப் பற்று' இராதவன் உள்ளத்தில் 'தாய் நாட்டுப்பற்று எங்ஙனம் கருக்கொள்ளும் ஆதலின் என்க. பிஞ்சிற் பழுத்த வெதும்பலாக வன்றோ முடியும்? 'இங்கிலாந்து வேண்டுமா? ஷேக்ஸ்பியர் வேண்டுமா?' எனின், வெள்ளையன் 'இரண்டும் வேண்டும்; ஒன்றுதான் தரப்படும் எனின், ஷேக்ஸ்பியரே வேண்டும்' என விடையிறுத்தல் கொண்டு அவனது மொழிப்பற்று நாட்டுப்பற்றினும் நனி சிறந்து விளங்கல் காணலாம். இந்நிலைமை தமிழரிடை ஏற்படும் நாளே 'தமிழ்நாடு தமிழருக்கு உரியது' ஆகும்.

இலக்கிய மொழியெல்லாம் செப்பஞ் செய்யப்பட்ட மொழிகளே. அவை பேச்சு மொழியைத் திருத்தமுறையிற்

கொண்டவையாகும். 'பேச்சுமொழி ஒழுங்கு நிலையை அடையின் இங்நிலையிற்றான் இருக்கும்' என நவில்வது போல நன்முறையில் அமைந்திருப்பது 'இலக்கிய மொழி'. இலக்கிய மொழியாக இன்று இருப்பது ஒரு காலத்தில் பேச்சுமொழியாக இருந்தது. இன்று கடினமாகவும் வியப்பாகவும் தோன்றும் டாண்டி பெட்ரார்க் (Dante & Petrarch) என்பவர்கள் வரைந்த லத்தீன் மொழிநடை ஒரு காலத்தில் சாதாரண மக்கள் பேசிவந்த மொழியே என்பதை நாம் அறிதல் வேண்டும். இவ்வுண்மை எல்லா மொழிகட்கும் பொருந்தும் என டாக்டர் ஸ்வீட் தமது 'மொழிகளின் நேரிய தன்மை'யில் (பக். 50) கூறியிருத்தல் கருதத் தக்கது.

இங்ஙனம், சாதாரணமாக வழங்கிய மொழி ஒன்றனைச் செப்பஞ்செய்தல், முடிபு கொடுத்தல் இன்ன பிற நீண்ட காலத்திய வளர்ச்சியாக இருத்தல் வேண்டும். காட்டாக, ரிக்வேதமொழி வளர்ச்சி வேதகாலத்துக்கு முன்னரே தொடங்கப்பெற்றதாதல்வேண்டும். என்னை? திடீரென மொழி அமைதி அத்துணைச் செம்மையாக அமைதல் ஒருபோதும் இயற்கையன்று ஆதலின் என்க. வாழையடி வாழையாக வந்த செய்யுள் நடையே ரிக்வேத நடை என அறிதல்வேண்டும். அந்த ரிக்வேத காலத்திலேயே வாழ்ந்த மக்களுள் பெரும் பகுதியோர் மொழி சுலோக நடையினும் சிறிது வேறுபட்டதாகவே இருந்திருத்தல்வேண்டும். என்னை? இலக்கிய மொழியினும் பேச்சு மொழி மாற்றம் பெற்றதாகலின் என்க' என 'C. M மல்வனி' என்னும் மொழிஆராய்ச்சி வல்லுநர் தமது 'இந்திய-ஐரோப்பிய மொழி' என்னும்நூலில் (பக். 109.) அழகாக அறைந்திருத்தல் அறியத்தக்கது.

"ஒரு நாட்டுமொழி முதலில் கொச்சையாகவும் கரடு முரடாகவுந்தான் இருக்கும். அதனைச் செப்பம் செய்யச் சிற்பிகள் தோன்றுவர்; செப்பஞ் செய்வர். கொச்சை நிலையில் அதனை எழுதுதற்குத் திறமைவேண்டும். அவ்வெழுத்துமுறை நாளடைவில் நன்றாகி இன்று காணப்பெறும் இலக்கியநடையில் காட்சியளிக்கிறது. முதன்முதலில் மொழியைச் செப்பஞ் செய்து எழுதுதல்—சாலைகள் போடுதற்கு முன் ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்தைக் கடத்தலை ஒக்கும். கொச்சை மொழியை ஒழுங்குபடுத்திய பிறகே இலக்கிய மொழியாகிறது. அந்நிலையை உண்டாக்குபவரே உயர்ந்தவர்; அதற்கெனச் சிலர் தோன்றி வேலை செய்தல் இயற்கையின் சிறப்பென்றே

கூறுதல்வேண்டும். ஒருவர் சொன்முடிபுகளைச் செப்பஞ்செய்வார்; ஒருவர் நடையைச் செப்பஞ்செய்வார்; ஒருவர் கருத்துக்களை ஒழுங்குபடுத்துவார்; ஒருவர் கருத்துக்களை வெளியிடுதற்குரிய சொல்லடுக்குகளை உண்டாக்குவார். இங்ஙனம் பலபேரறிஞரிது தொகை உழைப்பால் மொழி செம்மையுறுதல் உலகியற்கை. இப்பெருமக்களது தனிப்பட்ட நடை மொழிச்செல்வமாகப் பின்னோரால் கருதப்படும். அரிய தொடர்கள், ஓசை நயம், எதுகை மோனை இன்னபிற அழகுகள் படிப்படியாகப் படித்தவர் இடம் பரவும்; அவர்கள் அளவளாவும் போழ்து இவை அவர் தம் உரையாடலை அணிசெய்து ஆரு இன்பம் அளித்தல் ஒருதலை. சொல் அழகும் பொருள் அழகும் பின்னிச் செல்லும் பான்மை கற்றவர்க்குக் கழிபேருவகை விளைப்பதாகும். இத்தகைய உயரிய பண்பை முதன்முதல் உண்டாக்கும் மொழி வல்லார்க்கு உலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது என்பதில் வியப்பென்?" எனக் கார்டினல் நியூமன் என்பார் கூறியிருத்தல் (English Catholic Lecture, Section 4) மொழிப் பண்பை நன்கறிந்தார் பாராட்டற்குரியதாகும். இக்கூற்றால் மொழி எங்ஙனம் செப்பஞ் செய்யப்பெற்று 'வரைமொழி' ஆகின்றது என்பது எளிதில் புலனாகுமாறு காண்க.

வரை மொழியும் வாய் மொழியும் ஒன்றாக இருத்தல் இயலாததோ? எனின், 'இயலாது' எனக்கூறல் எவ்வாற்றானும் தவறாகாது. என்னை? மொழிப்புலமை எய்துதல் அனைவர்க்கும் ஆவதொன்றன்று. சாதாரணப் படிப்புடையார் ஓரளவு பயிற்சி பெறின், பிழையின்றி எளிய நடையிற் பேசலாகுமே அன்றிப் புலவர் நடையில் அனைவரும் பேசல் இயலாது. ஆயினும், அனைவரும் கல்வியறிவுபெறின் — தாய் மொழியைத் தூய்மையுடன் வைத்திருத்தல் வேண்டும் என்னும் உள்ளார்ந்த ஆர்வம் பிடர்பிடித்து உந்துமாயின் — அங்கிலையில் பிழையற்ற தமிழ் பொது உலகில் நடமாடும். அந்த முறை இன்று படித்தவர் இடம் காண்டல் அருமை! அருமை!! பண்டிதர்களிடமும் இல்லை. படிக்கின்ற மாணவரிடமும் இல்லை. ஒருவரிடமும் இல்லை! மொழிப்பற்று உள்ளத்தில் வன்மையோடு உறுத்துங்கால் பிழையற்ற முறையிற் பேசவேண்டும் என்னும் உணர்ச்சி தோன்றும்; முயற்சி முன்னுறும்; "குழந்தைகள் சிறு பருவத்தேயே பெற்றோர் மற்றோர் பழக்கத்தால் பிழையறப் பேசப் பயிலுமாயின், மொழி மாறுதல் அடையாது. ஆங்கிலச் சிறார் இன்றும் ஆங்கிலோ—சாக்ஸன் வார்த்தைகள்

பல பேசலைக்காணலாம். இதற்குப் பழக்கமே காரணம் ஆகும். மொழியில் உண்டாகும் மாறுதல்கள் முதலில் எளியவையாகவும் சிறியவையாகவும் காணப்படினும்—அவையே சில தலைமுறை களில் அம்மொழியின் தன்மையையே மாற்றிவிடுவன ஆகும்'' என மொழி இலக்கணப் புலவராய **டாக்டர் ஸ்வீட்** தமது ஆராய்ச்சி மிக்க நூலில் (பக் 75) அறைந்துள்ளமை அறிதற் பாலது.

எனவே, வரைமொழி பயின்று அம்மொழியினைப் பேசு வார்க்கும் வாய்மொழியைப் பேசுவார்க்கும் உள்ளதொரு வேறு பாடு நாளடைவில் பெருகித் தோன்றும் என்பது புலனும். வரைமொழியிற் பேசுவது என்பது, பலநூற்றாண்டுகட்கு முன் இருந்த புலவர்தம் செப்பஞ் செய்யப்பட்ட மொழியினை மனத்திருத்திப் பேசுதல் ஆகும். வாய்மொழியிற் பேசுதல் என்பது இன்றுள்ள மக்கள் மொழியிற்—கொச்சைத் தமிழிற் பேசுதல் ஆகும். படித்தமக்கள் ஒருவாறும் படியாமக்கள் ஒருவாறும் பல தலைமுறைகளாய்ப் பேசிவருதலால் தமிழ் (ஒவ் வொரு மொழியும்) வரைமொழி எனவும் வாய்மொழி எனவும் இரண்டாகி, வரைமொழி ஒரே நிலையில் மாறுது நிற்ப, வாய் மொழி காலம் கழியக் கழிய மாறுதல்களை ஏற்று ஏற்றுப் போதல் இயல்பாய் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாகும். மேலும் ஒரே மொழி மக்கள் அறிவு நிலைக்கு ஏற்ப மாறுதல் அடை தலும் இயல்பு எனவே, 'இழுத்துக்கொண்டு' எனப் படித்த வரும், 'இழுத்துகிட்டு, ஈத்துகிட்டு, இஸ்துகினு' எனப் படிப்படி யாகக் கீழ்நிலையில் உள்ள மக்களும் பேச இயல்பாகவே இடம் ஏற்படுகிறது. இந்நிலை வளரவளர, முன்னரே படியாதமக்களைப் பிறகாரணங்காட்டி வேறுபடுத்திவந்த படித்தவர், இம் மொழி வேறுபாட்டினையும் துணையாகக் காட்டித் தம்மைச் சமுகத் தினின்றும் வேறு பிரித்துக்கொள்ள முனைதல் உண்டு; அதே அமயம் வரைமொழியைப் பாதுகாக்கத் தம்மால் இயல்பவை அனைத்தும் முயன்று முடித்தலும் உண்டு; இலக்கணம் வகுத்து வாய்மொழி வரைமொழியிற் புகா வண்ணம் எல்லை எடுப்பர்; தம் பிள்ளைகள் அவ்வாய்மொழியைப் பேசாதவாறு பாதுகாத் தலும் செய்வர்; இங்ஙனம் மொழிமாறுதல் சமுகத்தில் இரண்டு பிரிவுகளை இயல்பாகவே உண்டாக்கிவிடுகின்றது.

எடுத்துக் காட்டாக வடமொழி வேதங்களை எடுத்துக் கொள்வோம். அவற்றைக் குருகுலத்தில் பிரமசரிய நிலையில் இருந்தே மாணவர் பயின்றுவந்தனர். அவர்கள் உலகப் பொது மக்களிடம் அப்பருவத்தில் பழகியறியார். எனவே, ஆசிரியர்

கூறிய உச்சரிப்பு, சந்தை சொல்லும் முறை, மனப்பாடம் செய்யும் விதம், எடுத்தல் — படுத்தல் — நலிதல் முதலாய சுரபேதங்களுடன் சொல்லும் தன்மை இவற்றில் பழகிப் பழகிப் பண்பட்டு விட்டனர். இவ்வாய்ப்பு ஏனையோர்க்கு இன்மையால், வேதங்களில் வல்ல பிரமசரியர்க்கும் பொது மக்கட்கும் இடையே மொழிபற்றிய வேறுபாடு விரிந்தது; பழக்க வழக்கங்கள் விரிந்தன; உயர்வு தாழ்வுகள் தோன்றின. ஏனையோர் வேதங்களைப் படிப்பின் அதன்மொழி நலம் கெடும் என்னும் எண்ணத்தோடு தடுக்கப்பட்டனர். இங்ஙனம் இளமை முதலே வரைமொழியில் பயின்றவர் வாய் மொழியாளரிடம் வெறுப்புறுதல் இயல்பாகும். என் செய்வது! இதனால் நாம் அறிவதொன்றே மிக்க பயனுடையது. அஃதாவது, பிள்ளைப் பருவத்தே வரைமொழி பயிலச்செய்தல்-அதனிற் பிள்ளைகளைப் பேசச்செய்தல் ஒன்றே நாளடைவில் சமுகத்தைத் தூயமொழி யில் பேசவைக்கும் பண்பாகும் என்பதே. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' ஆதலின் இளமையில் உண்டாகும் சொற்களின் பிழையற்ற உச்சரிப்பு, ஒலிஅமைப்பு இன்னபிறவும் இளமையிற் பண்படச் செய்தல்வேண்டும். இளமையில் இவை வலியுறு மாயின், வரைமொழி அவர் தம் வாழ்க்கையில் வாய்மொழியா வதில் வியப்பில்லை அன்றோ?

இதுகாறும் கூறியவற்றால், முதலில் வாய்மொழியாகஇருந்த ஒன்றே வரைமொழி ஆனது என்பதும், காலம் கழியக் கழிய வரை மொழியினின்றும் வாய்மொழி மாறுபாடு பெற்றுக் கொண்டே போகும் இயல்புடையது என்பதும், இவ்வேறுபாடு தமிழர் கல்வியறிவின்மையால் வளர விடுவராயின், இருமொழி களும் நாளடைவில் தொடர்பற்றுத் தனிமொழிகளாக மாறி விடக்கூடும் என்பதும், அவ்விழிவுநிலை ஏற்படின் வடமொழி போலச் செந்தமிழும் இறந்தமொழி ஆய்விடக்கூடும் என்பதும், ஆயின், மக்கள் ஓரளவு மொழிப்பற்றும் கல்வி அறிவும் உடைய ராயின், இருமொழிக்கும் வேறுபாடு சிறந்து தோன்றாது என் பதும், அந்நிலைமை ஏற்படத் தமிழ் மக்கள் முயன்று தாய் மொழி கற்றுத் தமிழ்ப் பற்றுடைய தமிழராய் வாழ்தல் வேண்டும் என்பதும், தாய்மொழிப் பற்றே தாய் நாட்டுப் பற்றுக்கு அடிப்படையாகும் என்பதும் தெளிவுறத் தெரிந்து கொள்ளலாகும்.

பனையரும் இந்திரனும்

வித்துவான் திரு. ச. தநஸ் அந்தோணி அவர்கள்,
St. Joseph's College, Trichinopoly.

(முற்றொடர்ச்சி துணர் 14, மலர் 9, பக்கம் 344.)

பேபரு ஜாதகாவில் கண்ட, செட்டான வணிகர், திராவிடர்களே என்று கூறினோம். ஆதலால், அவர்களும், அவர்களைச் சேர்ந்த மக்களும், கீழ் மோசப்பத்தாமியாவில் கண்ட ஆதி திராவிட எழுத்துக்களைக் கொண்ட உருண்டை இலச்சினைகளுக்கு உரிமையாளர் என்று ஐயமின்றிக் கூறலாம்; அவர்களில் சிலர் தங்கள் இலச்சினைகளைத் தொலைத்திருக்கலாம்; அல்லது சிலர் அங்கே இறந்திருக்கலாம். அவர்கள் எவ்வாறாயினும் அவர்கள் விட்டுச்சென்ற இலச்சினைகளைத் தற்காலத்தில் ஆராய்ச்சியிற் சிறந்த புலவர்கள் தோண்டி எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இந்தியாவின் எந்தப்பாகத்திலிருந்து அவைகள் எடுத்துச் செல்லப்பட்டன என்பதற்கு இன்னும் விடை வெளிவரவில்லை. இதற்குப் பதில் கூறவேண்டுமானால் ஆரியர்கள், இந்தியாவே, வாழ்வதற்குத் தகுந்தவிடம் என்று கண்டு இந்தியாவில் குடியேறித் தங்கிய பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிவரையிலும் சரித்திர நூல்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து ஆராய்தல் இன்றியமையாதது. நாடோடிகளான ஆரியர் இந்தியாவையே, புதிதும் எக்காலமும் வாழ்வதற்கு ஏற்ற விடமாகவும், கண்டனர் என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

மேற்கிந்தியாவில் தலைசிறந்ததும் மோசப்பத்தாமியாவுக்கு ஒருவாறு சமீபமாயுமுள்ளவிடம் கத்தியவாரே—சிந்துப் பள்ளத்தாக்குத்தவிற-கத்தியவார் என்ற பெயர் தற்காலத்தில் இடப் பட்டது; இப்பெயரிட்டழைப்பதற்கு முன்னர்" நல்ல நாடு" என்றபொருள் உள்ள "சௌராஸ்திரம்" என்று அழைக்கப் பட்டுவந்தது எனினும் இப்பெயரே, இதற்கு பழங்காலத்தில் வழங்கிவந்ததாகவும் தெரியவில்லை. அங்கு சூரியனுக்கு அநேக கோவில்கள்கட்டப்பட்டு அவை விளங்கிவருகின்றன. ஆதலால், அது, சூரியனுக்கு ஏதோ ஒருகூற்றில்தொடர்பு பெற்றிருத்தல் வேண்டும். சூரியனுக்கென்று, தனிமையாக ஒதுக்கப்பட்ட கோயில்கள், இந்தியாவில் பெரும் பான்மையாகக் காணப்படு

கின்றன அல்ல ; ஆனால் வேதத்திய கடவுளர்க்கோ கோயில்கள் ஏராளமாக எடுக்கப்பட்டுள்ளன. எனினும் அந்தச்சிறிய கத்திய வார் தீபகற்பத்தில் உள்ள அநேக சிறிய ஊர்களிலும் சிறிது பெரிய ஊர்களிலும், சூரியதேவனுக்கு அநேக கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. சோமநாதபட்டணம் அல்லது பிரபஸ்தான பட்டணம் என்ற விடத்தில் மூன்றுகோயில்கள் இருக்கின்றன. ஜமோ மசூதியின் பக்கத்தில் நின்ற ஒருகோயில் மறைந்து விட்டது ; மற்றொன்று திருவேணியை எதிர்நோக்கி நிற்கின்றது. மற்றும் முதிரம் சூத்ரபதிகிண்டர்க்கீதம், கண்டோலிக் கோட்டையி லுள்ள தான்கோட்டை, கந்தக்கோட்டை, அரசவல்லி முதலிய விடங்களில் சூரியனுக்கு எடுத்த கோவில்கள் காணக் கிடக்கின் றன. விசவதை, போர்த்தடை, பகவத்தார் முதலியவிடங்களில் பண்டைச்சூரிய உருவங்கள் காணப்படுகின்றதால் பழங் காலத்தில், அங்கும் சூரியகோவில்கள் இருந்தனவாக அவைகள் சான்று பகர்ந்து கொண்டிருக்கின்றன. (Burgess-Reports of the Antiquities of Kathiawad & Kacch (London 1876); Consens, Somanatha and other Mediaeval Temples in Kathiawad (Galcutta 1931) இன்னும் கணக் கற்ற சூரியகுண்டங்களும் முல்துவாரகையில் இருக்கின்றன ; பஸ் தாரில் சூரியகிணறுகள் காணப்படுகின்றன. இவ்வளவு அருமை யான சூரியபக்தி அங்கு நிலைத்திருப்பதற்குக் காரணம் என்ன? அதைப்பற்றி பர்கஸ் என்பவர் கூறுவதாவது : "சூரியன் கத்தி யரின் சிறப்பான வழிபடு பொருளாகத் தோன்றுகிறது ; கதியர் என்பவரே, இந்தத் தீபகற்பத்திற்குக் கத்தியவார் என்று பெயரிட்டனர்." cf. Burgess. op cit. P. 215.)

கத்தியவார் இந்தியாவின் கீழ்க்கரையில் இருக்குமானால் மேற்கூறிய கேள்விக்கு விடைபகர்தல் எளிதே. ஏனெனில் கத்தியவார், சூரியன் எழும் கீழ்த்திசையிலிருந்ததென்றும், ஆண்டிருந்தே, அதுமேல்நோக்கிச் சென்றதுஎன்றும், அதனால் சூரியபக்தி அங்கு அதிகமாயிருந்ததென்றும் கொள்வதற்கு இடம் உண்டு. ஆனால் உண்மையோ முற்றிலும் முரணாயிருக் கின்றது ; கத்தியவார் மேற்குக் கடற்கரையில் அல்லவா இருக்கின்றது. அதன் உண்மை விளக்கம் கத்தியவாரின் பண்டைப்பெயரில் இலைமறைகாய்போல் பொதிந்திருக்கின்றது என்பதை நாம் காட்டுவோம்.

18-வது நூற்றாண்டில் நடந்த மராட போர்களுக்குப்பின், அதுகத்தியவார் என்றுஅழைக்கப்பட்டது. இவ்வாறுஅழைக்கப்

படுவதற்கு முன்னர் அது "நல்ல நாடு" என்று பொருள்படும் சௌராஸ்திரம் என்றே அழைக்கப்பட்டுவந்தது; இப்பெயரும் அதற்கு ஏற்பட்ட பழங்காலத்துப் பெயர் அல்ல என்று தோன்றுகிறது. சுனகத நாட்டிலுள்ள 'கிர்னர்' அடிவாரத்தில் அமைந்துள்ள **உருத்திரதாமன், கந்தகுப்தம்** என்றவிடங்களில் கண்ட சின்னங்களில், கத்தியவார் தீபகற்பம், 'சௌராஸ்திரம்' என்றே கூறப்பட்டுள்ளது. (Sastri, The Asokan Rock at Girnar. P. P. 31 & 38). இந்தச் சிறிய வேறுபாடு மிகவும் முக்கியமானது. 'சவித்ர' என்னும் பகுபதத்திற்குப் பகுதி 'சு' ஆக இருக்கலாம். இது வேதகாலத்திலிருந்து தற்காலம் வரையிலும், சூரியனுக்கு இடப்பட்ட பலபெயர்களில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. சு = செல்; இயங்கு; இயக்கு. என்று பொருள்படும். ஆதலால் சு + இதர = சவித்ர என்பது இயக்குங்கருத்தா, உற்பத்திசெய்கிறவன், உயிர் அளிப்போன், ஊக்கம் அளிப்போன் என்று பலவகைப் பொருளுக்குப் பொருத்தமான சூரியனையே குறிக்கின்றது. ஆதலால் 'சௌராஸ்திரம்' என்பதற்கு 'இயக்குவோன் நாடு' என்று கூறலாம். அல்லது சிறப்பியல்பால் 'தோற்றுவிப்போன்நாடு' வானூர்ந்து செல்லுவோன்நாடு' 'சூரியநாடு' என்ற திரண்ட பொருள்களைப்பெறும். இப்பெயரே, முதன்முதலில் ஆரியர்களால் இடப்பட்டபெயர் என்று தோன்றுகின்றது.

எனினும் மேற்குக்கரையிலுள்ள நாட்டைச் 'சூரியனின் நாடு' என்று கூறுவது வியப்பாகும் அல்லவா? ஏனெனில் 'சூரியனின் நாடு' கிழக்கில் அமைந்திருந்தால், சூரியன் தோன்றுகின்ற கிழக்குத் திசையிலிருப்பது இயற்கை என்று யாவரும் ஒப்புக்கொள்வர். ஜப்பான் சீனத்திற்குக்கிழக்கிலிருக்கிறது; ஆதலால் சீனர் ஜப்பானை, 'எழுகின்ற பருதியின் தனிநாடு' (The Empire of the rising sun) என்று அழைக்கிறதை நாம் காண்கிறோம். சூரியனைப் பற்றிப் பேசும்பொழுது மனிதன் கீழ்த்திசையையே குறிக்கிறான். ஆனால் இச்சந்தர்ப்பத்தில் சூரியன் நாடு மேற்குக் கடற்கரையில் அமைந்திருக்கிறது.

எனவே, இப்பெயர், ஆரியர்கள், இந்தியாவில் குடியேறுவதற்கு முன்னர், இந்த விடத்திற்கு இட்டபெயர் என்று இப்பெயரே தெளிவாய்க் காட்டுகின்றது. அவர்கள், அக்காலத்தில், இந்நாட்டிற்கு மேல் திசையிலிருந்தே பெயரிட்டிருக்கவேண்டும்; அவர்கள் அப்பொழுது வதிந்த நாட்டிற்குக் கீழ்த் திசையில்

சௌராஸ்திரம் இருந்திருக்கவேண்டும். ஆதலால் ஆரியர் சௌராஸ்திரத்தோடு உற்றதொடர்பு, பாபிலோனியாவோடு வாணிபம் நடத்திய பணையர்களால் ஏற்பட்டது. பாபிலோனியாவில் மிதானியர் ஒருகாலத்தில் வசித்துவந்தாலும், அவர்களுடைய கடவுளரான மி — இத் — ரா — ஆஸ், நா — சா — அத் — தி, — யா — அண் — ணு. உ — ரு — வ — ணு, இந் — தர் முதலியவர்களுடையபெயர் இந்து — ஆரியக்கடவுளான, மித்ரா, வருணன், இந்திரன், நாசாத்தியன் முதலியவர்களோடு ஒத்திருப்பதாலும் கிழக்குநோக்கிக் குடியேறிச்சென்ற ஆரியர், தாங்கள் சென்றவழியிலுள்ள மொசப்பத்தாமியாவில் தங்கிவிட்டனர்என்று நிச்சயமாயறிகின்றோம். முரட்டுக்குணமும் நாகரிகமும் அற்ற ஆரியர், பணையர்களால் கொண்டுவரப்பட்ட இந்தியாவின் இயற்கை அதிசயப்பொருளையோ, அல்லது வினைபொருளையோ கண்டு, இயல்பாகவே பணையர்களைச்சுட்டி, “அவர்கள் எங்கிருந்து வருகின்றார்கள்” என்றுவியந்து கேட்டிருக்கக்கூடும். அவர்களுள் ஒருசில அஞ்சாநெஞ்சினர், அந்நாட்டுமக்களான செமிதியர்களையும், சுமேரியர்களையும் பார்த்து “இம்மக்கள் எங்கிருந்து வருகின்றார்கள்” என்று கேட்க, அவர்கள் “இவர்கள் சூரியனின் நாட்டிலிருந்துவருகின்றார்கள்” என்றுபதிலளித்தனர். “ஆகா, சூரியநாட்டிலிருந்தா? — சௌராஸ்திரத்திலிருந்தா? வருகின்றார்கள்?” என்று கூறி வியந்தனர். இவ்வாறு, அந்த எளிய மக்களுக்காகப் பணையருடையநாடு ‘சூராஸ்திரம்’ என்று அழைக்கப்பட்டது.

சௌராஸ்திர நாட்டின் இயற்கைப் பொருளும், அதனுடைய அழகியபெயரும், அந்த எளியகுடிகளுடைய மனதில் ஒருவியப்புள்ள உணர்ச்சியை எழுப்பின. அவர்கள் செமிதியப் பிரபுக்களுக்கு அடிமைகளாயிருந்தனர்; தலைவர்கள் அவர்களைக் கொடுமையாய் நடத்தினர்; நாடும் சிறந்தநாடாக அவர்களுக்குத் தோன்றிலது: ஆதலால் பலவகைத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது. எனவே அவர்களுக்குச் சௌராஸ்திரத்தில் குடியேறலாம் எனும் எண்ணம் தோன்றிற்று. ஆனால் வெகுதூரமான அன்னிய நாட்டில் குடியேறுவது எளிதானசெயலா? ‘ஒல்காக்’ கரையிலிருந்து வந்த ஆரியர் கடலையே கண்டதில்லை. (Heras: The cradle of the Aryans. The new Review V 473, 476) அவர்களில் கொஞ்சப்பேர் கீழ் மொசப்பத்தாமியாவிலுள்ள சுமேரியனை ஒருவேளை கண்டிருக்கலாம்; ஆயினும் கடலைக் கடந்து செல்லவேண்டுமே என்றஎண்ணம் கிஞ்சித்தேனும்அவர்

களிடத்தில் தோன்றவில்லை. செல்வத்தில் வளர்வதற்கு ஏற்ற மாயுள்ள இயற்கைநலம் நிறைந்த இந்தியாவில், கூட்டத்தோடு வந்து குடியேறுவது, ஆரியருக்கு, எண்ணற்கரிய ஆபத்தை விளைக்காமலிருக்க முடியாது; மேலும் அறியாத அந்நியநாடு பாமர மக்களுக்குப் பயத்தையே அளிக்கும். ஆரியர் தலைவனான அசுர இந்திரன், ஆரியமக்கள் எல்லோரையும் ஒரே தடவையில் இப்புது நாட்டுக்குக் கொண்டு செல்லத் துணியவில்லை. இந்த அசுர இந்திரனே, இருக்குவேதத்தில் பாடல்பெற்றவன். (இரு 1, 54, 3, 1, 174, 1; ii, 38, 4; ×, 96, 11; ×, 98, 2; ×, 99, 12.) குடியேறுவதற்கு முன் நாட்டைப்பற்றி நன்கு தெரிந்து கொள்ள விரும்பினான். ஆதலால் தன்னோடு, 'யது, துருவாசன்' என்ற இரண்டு குடும்பத்தினரைக் கூட்டிக்கொண்டு பணிய ருடைய நாவாய்களில் ஏறிப் பலநாள் பிரயாணம் செய்து கத்திய வார்க் கரையை அடைந்தான்.

ஆரியர் கடல் கடந்து சென்ற முதற்பிரயாணம் இருக்கு வேதத்தில் பலவிடங்களில் பன்முறை கூறப்பட்டுள்ளது. "ஓ! வீரனே! துருவாசனையும், யதுவையும், வெள்ளத்தைக் (கடலை) கடந்து சுகமாகவும் பத்திரமாகவும் கொண்டுவந்தாய்." என்று இந்திரனுக்குச் சாற்றிய ஒரு பாடல் கூறுகின்றது (இரு. vi. 21, 12) "ஓ வீர! நீ வெள்ளத்தைக் கடக்கும்பொழுது துரு வாசனையும் யதுவையும் பத்திரமாகக் காப்பாற்றினாய்" என்று இன்னொரு பாடல் கூறுகின்றது. (இரு. 1; 174, 9) மற்றும் ஒரு இடத்தில், அவர்கள் நாவாய் ஏறுவதற்கு முன், உள்ளத்தில் வெருண்டதாகத் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. "கூர்ந்த அறி வுள்ள இந்திரா! மறத் தலைவனே! வெள்ளத்தைக் கடப்பதற்கு வெருண்டு மருண்ட துருவாசனையும் யதுவையும் பத்திரமாகக் கொண்டு வந்தாய்" (இரு. vi, 30, 17.)

நூல்களில் கூறப்படுகின்ற இந்திரன், ஒருசரித்திர சம் பந்தம் உள்ள தலைவன். அவன் இறந்தபின், பண்டைக் கால வழக்கப்படித் தெய்வமாக்கப்பட்டான். வேதத்தில் காண்கின்ற தேவர்களில், இந்திரன் மனிதக் குணமுள்ளவனாகவே காணப் படுகின்றான். (Griswold: The Religion of the Rig Veda P. 177 (Oxford, 1923) ! Macdonell-Vedic Mythology P. P. 54, 57. (Strasburg 1897).

ஆரியர் முதன் முதலில் கரைமிதித்த இடம், தற்காலம் கத்தியவார் என்று அழைக்கப்படுகின்றது. அதன் பண்டைப்

பெயர் 'சுராஸ்திரம்'. நாம் கூறுகின்ற இப்பெயர் சரித்திர நிபுணர்களுக்கும் உடன்பாடானதே (Chanda, Indo-Aryan Races pt. 1, P P 24, 25; Banarji op cit, P. 25) ஆரியர் சூராஸ் திரத்தில் இறங்கித் தங்கவேண்டிய காரணம் என்ன? பணியர்கள் சென்ற வழியைப் பின்பற்றி, அவர்கள் இந்தியா வுக்குள் நுழைந்தால், அவ்வணிகர் எந்தவிடத்தில் இறங்கினர் களோ, அந்த விடத்திலேயே, அவர்களும் இறங்கினர்கள் என்று நாம் கூறுமலே விளங்கும். கத்தியவார் தீபகற்பத்தின் எந்தத்துறைமுகத்தில் இறங்கினர்கள் என்று நிச்சயப்படுத்திக் கூறமுடியாது. எனினும், ஆரியர் குடியேற்றத்துணிவில் முதன் முதலில் இறங்கியவிடம், தற்காலப்பெயரான '**வேரவால்**' அல்லது அதன்பக்கமாயிருக்கலாம் என்று துணியப்படுகிறது. மிகப் பழங்காலத்தில் சுராஸ்திர நாட்டின் மேற்குக் கடற் கரையில் புகழால் விளங்கிய "**மீன் நகரம்**' என்ற ஒரு நகரம் இருந்தது. இப்பெயரில் 'மீன்' என்னும் சொல் திராவிடம்; 'நகரம்' என்னும் சொல் ஆரியம் என்று சொல்லப்படுகின்றது. ('நகரம்' என்பது திராவிடச்சொல்லே ஒழிய ஆரியம் அன்று). இச்சொற்களின் பொருள் 'ஒளியுள்ள நகரம்' என்பது ஆகும். இந்த விநோதமான புணர்ச்சியால், மீனகரம், ஆரியர் நுழை வதற்கு முற்பட்டே தோன்றியிருந்தது என்று விளங்குகிறது. ஆதலால், அந்த முற்பட்ட காலத்தியப்பெயர், மீனூர் ஆகும். இதன் பொருள் 'ஒளி உள்ளஊர்' என்பதே. இந்தப்பெயரே மோகஞ்சுதாரில் கண்ட சின்னங்களில் காணப்படுகின்றது. அவைகளில், ஒன்றில்கண்ட எழுத்துக்கள் பின்வருமாறு:

அது கால் ஊர் மீன் ஊர்வெளி பேர் தளிர்



(Photo. M. D. 193—1. 11264.)

வாசகர் சின்னங்களைப் படிக்கும்பொழுது அறிய வேண்டி யன (1) இடது புறத்திலிருந்து இவைகளைப் படிக்கவேண்டும். (2) இச்சின்னங்களில் பொறிக்கப்பட்டுள்ள குறிகளைத் திராவிட மொழிகளாலே பொருள்காணலாமே ஒழிய ஏனையமொழிகளால் காணமுடியாது. (Journal of Indian History — Mohenjo-Daro-The Most Important Archaeological Site in India, p p 1, 3 5 By. Rev Fr. H. Heras S. J.) (3) மோகஞ்ச தாரின் எழுத்துக்கள் எல்லாம் ஒலிப்பதிவுப் படக் குறியாகும். (Pictophonograph). அவைகள் **முறையிலக் கணத்திற்கு** (Logic) முற்றிலும் பொருந்தியவையானதால், சிலவேளைகளில் அவற்றின்பொருள் தெரியாமலே அவைகளைப்

படிக்கலாம். (Journal of Indian History Mohenjo Daro. p. 2.) குறிகள் எல்லாம் ஒலிப்பதிவுப் பெற்று, ஒலியையே குறிக்கின்றன. அவைகள் ஒலிக்கேற்ற அடையாளம்; ஆதலால் ஒலியால் குறிக்கப்பட்டபொருளைக் காட்டா. இத்தகைய படவெழுத்துகளே பிற்காலத்தில் எழுத்துமுறை வகுப்பதற்குக் காரணமாயிருந்தன. ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழையும்பொழுது அவர்கள் மொழிக்கு எழுத்துக்கள் வகுக்கப்படவில்லை. ஆதலால், அவர்களுடைய பகைவரான தாஸ்யுக்களுடைய எழுத்துக்களையே தாங்களும் மேற்கொண்டனர். தாஸ்யுக்கள், திராவிடர்களில் ஒரு கூட்டமான நாகர்கள் என்று தோன்றுகிறது. நாகரிடத்திலிருந்து கற்றுக்கொண்ட எழுத்துக்களே நாகரி என்று அழைக்கப்படும் (The Tamils 1800 years ago P. 45.) நாகர் எழுத்துக்களிலிருந்து வேறுபடுத்தவே ஆரியர் தங்கள் எழுத்துக்களை 'தேவநாகரி' என்று மாற்றிக்கொண்டனர். இவ்வாறு, இந்தத்திராவிடப் படஎழுத்துக்கள், இரண்டு வெவ்வேறு வழியில் பண்படுத்தப்பட்டன. வட இந்தியாவில், ஆரியர்களாலும், தங்களை ஆரியர் என்று கூறிக்கொண்ட திரவிடப் பனையர்களாலும், தென்னிந்தியாவில், இவ்வெழுத்துக்களை முதன் முதலில்கண்ட தனித்திராவிடர்களாலும் வளர்க்கப்பட்டன. (Rev. Fr. Heras Journal of Indian History, Mohenjo Daro P. 10). இந்த எழுத்துக்களிலிருந்தே இந்தியாவிலுள்ள பலமொழிகளின் எழுத்துக்கள் தோன்றின. (Rev. Fr. H. Heras Light on the Mohenjo Daro Riddle New Review calcutta III P. 7.)

நிற்க, மேற்குறித்த சின்னத்தில்கண்டதொடர் "தளிர்ஊர் வெளிபேர் மீனூர்கால் அது" என்பதாகும். எனவே இதன் பொருள், "அது மீனூரின் கால்பகுதி; அது திருவளர்கின்ற நாட்டுக்குப் புறத்திலிருக்கிறது".

எனவே, சின்னத்தில் குறித்துள்ள ஊர் மீனூர் என்றே தெரிகின்றது; அஃது கத்தியவார் தீபகற்பத்தின் மேற்குக்கரையிலிருந்ததாகத் தோன்றுகின்றது. அவ்வூர் தீபகற்பத்தில் அகப்பட்டிருந்ததால், மிகப் பண்டைக்காலத்தில் ஒரு வாய்க்காலால் முக்கிய நிலத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தது. (Wilberforce-Bell. The History of Kathiawar p. 5). ஆதலால், அது நாட்டுக்கு வெளியிலுள்ள 'ஊர்' என்று சின்னத்தில் கூறப்பட்டது பொருத்தமானதே. மீனாட்டைக் குறிக்கும்பொழுதெல்லாம், 'திருவளர்' என்ற அடைமொழி, அதிகமாகக் காணப்படுகின்றது. மீனாடு என்பது, மீனவர் நாடு என்று பொருள்படும்; பாண்டியர்களும் மீனவர் என்று அழைக்

கப்படுவது இங்கு கவனிக்கத்தக்கது. தடாதகைப் பிராட்டி இமயம்சென்று போர்புரிந்தது, தன்இனத்தைச் சேர்ந்த மீனவனோடு என்று கொள்ள இடமுண்டு. திருவிளையாடற் புராணத்தை உற்றுநோக்கி அறிஞர்கள் ஆராய்ச்சிசெய்வார்களாக. மற்றொருசின்னத்திலும் மீனூர் கூறப்பட்டுள்ளது.

அது கால் ஊர் மீன் ஊர்வெளி இருஉயர்எல்



(Photo. M. D. 1930—1. 10753.)

எல் — சூரியன். (இ—ள்) அது மீனூரின் கால்பாகம்; அது இப்பொழுது இருக்கின்ற உயர்ந்த சூரியன் நாட்டுக்கு வெளியிலிருக்கின்றது.”

இச்சின்னம் மிகவும் முக்கியமானது. இஃது, மீனாட்டை உயர்ந்த சூரியன் நாடுஎன்று கூறுகின்றது. தற்காலத்திய கத்தியவார், அக்காலத்தில், அந்நாட்டின் (மீனாடு) வெளிப்புறத்தே இருந்தது. எனினும், யதுகுலமும் துருவாசகுலமும், இந்தியாவில் கால்வைத்தபொழுது தாங்கள் நினைத்து வந்த சூரியனுடைய நாட்டில், கால்வைத்து விட்டதாகவேநினைத்து, அதைச் (சூராஸ்திரம்) என்றே அழைத்துவிட்டனர், கொலம்பஸ் அமெரிக்காவை இந்தியா என்றதுபோல.

மீனூர் எந்த விடத்தில் இருந்தது என்று இப்பொழுது நிச்சயமாகக் கூறமுடியவில்லை.

கண்ணகி

திரு. ச. க. கோவிந்தசாமி அவர்கள், M.A.,
விரிவுரையாளர், அண்ணாமலைநகர்

செந்தமிழ் இலக்கியங்களில் புலவரால் சித்தரிக்கப்பெற்ற பெண்மணிகளுள் கண்ணகிக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனலாம். கண்ணகியின், "காவியுகுநீருங் கையிற்றனிச் சிலம்பும் ஆவிகுடிபோன அவ்வடிவும்" நான் எண்ணும்போதெல்லாம் மற்றொரு பெண்தகையார் தம் ஓவியம் என் கண்முன் தோன்று நிற்கும். அஃதே தற்கொண்டானுக்காக "தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங்குன்பால், ஆங்கு நின் தாள்கள் போற்றும் பேய்வடிவு அடியேனுக்குப் பாங்குறவேண்டுமென்ற" படியே அடைந்த புனிதவதியாரின் தோற்றம். அது நிற்க, கண்ணகியின் வரலாற்றுண்மையை மறுக்க இயலாதெனினும், இளங்கோவடிகள் குன்றக்குறவரும் சாத்தனும் கூறினதைக் கொண்டு மாத்திரமே அவ்வழகிய என்றுமழியா உயிர் ஓவியத்தைத் தீட்டி அருளினரென்று எவரேனும் சொல்லமுடியுமா? அவர்கள்பால் கண்ணகியின் கதையைக் கேட்டதின் காரணமாய் இளங்கோவடிகளின் கவி உள்ளத்தில் துயரம், இரக்கம், அன்பு என்னும் உணர்ச்சிகள் ஊற்றெடுத்து வழிய, அதன் வாயிலாய் கண்ணகியின் உண்மை வடிவையும் உள்ளக்கிடக்கையையும் உணர்ந்து அக்கற்பரசியின் ஓவியத்தை அவர் எழுதியளித்தார் என்றலே பொருந்தும். ஒரு புலவனது உணர்ச்சியும் அவன் இயற்றிய ஆண் பெண் சித்திரத்தில் எத்தகைய உணர்ச்சி தோன்ற வேண்டுமோ அவ்வுணர்ச்சியும் ஒன்று படும்போதே உயிர் ஓவியங்கள் தோன்றுகின்றன. அத்தகைய ஓவியத்திற்கும் ஓவியக்காரனுக்கும் இடையே தோன்றும் உணர்ச்சி ஒற்றுமையால் தீட்டப்பெற்ற வடிவமே தமிழ் பெண்களுள் சிறந்த கண்ணகியின் வடிவம்.

உடலின் ஒவ்வொரு உறுப்பாய் பலபாக்களில் விதந்துகூறும் புலவரைப்போலல்லாது, இளங்கோவடிகள் கண்ணகியைத் தன் சிறந்த காவியத்தில் முதன்முதல் தோற்றுவிக்கையில் அறிமுகப்படுத்தும் ஆங்கில முறைபோல் "மாநாய்கன் குலக்கொம்பர் ஈகைவான் கொடியன்னார்" என்று நம் முன் கொணர்ந்து நிறுத்துகின்றார். சேக்கிழாரும் "பரவையை"

முதலில் "கற்பகத்தின் பூங்கொம்போ" என்றே விதந்துரைத்தார். பற்றுக்கோடு நாடிநிற்பதினுலும், சீலம் நிறைந்திருத்தலானும், தன்பாற் காதற்செய்தானுக்கு காதல் பூணும் கடப்பாடுடையாளாகையாலும் "ஈகைவான் கொடி" என்றார்போலும். கொடியென்றதினுல் அவளுடைய மெல்லிய தன்மையும் உணர்த்தப்பெற்றது. அவள் வாக்கின் இனிமையைக் "குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த .... மழலைக் கிளவி" என்றார் இளங்கோவடிகள். இதை நினைவிற் கொண்டுபோலும் சேக்கிழார் காரைக்காலம்மையாரை "மகளிர் கிளவி யாழினெடும் பொருவும்" மொழியுடையாரென்றார். கண்ணகி என்னும் மெல்லியல் நல்லாள் செவ்வேளன்ன கோவலனுடன் சில்லாண்டு விருந்து புறந்தரும் பெருந்தண்வாழ்க்கையை நடத்தினர்.

"ஆடலும், பாடலும், அழகும்" சிறந்த மாதவிபால் மால் கொண்டு கோவலன் செல்ல கண்ணகியும் தனித்திருக்க ஆற்ருது "ஊதுலைக் குருகின் உயிர்த்தனள்." அவ்வமயம் கண்ணகியைத் தேற்றுதற்குப் போந்த "தேவந்தி" என்னும் பார்ப்பனி சோமகுரியகுண்டத்துறைப் படிந்தால், இழந்தகணவனை பெறலாம் எனச்சொல்ல, அதற்கு கண்ணகி "பீடன்று" என்று கூறிய உரை, அவள் உளத்திட்பத்தையும் கற்பின் திறத்தையும் காட்டுகின்றது. கண்ணகியும் கற்புக் கடம்பூண்ட தெய்வமல்லவா! கானல்வரியில் ஏதம் விளைந்த காரணத்தால் மாதவியைப் பிரிந்த கோவலன் தன் செயலை நாணி, குலந்தரு வான் பொருள் அனைத்தும் தொலைத்த தன் செயல் நாணும் தகைமையது என்றுகூற, அவனைக் கடிந்துபேசாது "நலங்கேழ் முறுவல் நகைமுகங்காட்டிச் சிலம்புள" என மொழிந்ததும் அவளுடைய மென்மைத் தன்மையையே விளக்குகின்றது. பலநாள் பிரிந்த கணவனையடைந்தும் மறுநாட் "கனை சுடர் கால்சியா முன்" கண்ணகி தன் காதலனேடு மதுரை செல்ல நேர்ந்தது. ஆதலால் கண்ணகியும், "பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமோ" என்று கூறிய இன்பத்தைத் துய்க்க இயலாதவள் ஆயினுள்.

அவர்களின் மதுரைச் செலவைப்பற்றிக் கூறும்போதெல்லாம் இளங்கோவடிகள் கண்ணகியின் மெல்லியலையும் உலகஅனுபவமின்மையையும் எடுத்துக் காட்டுகின்றார். கண்ணகி மதுரையின் தொலைவு அறியாள். புகாரை விட்டுச் சிறிது தூரம் சென்றயர்ந்து நடக்கமாட்டாளாய் "முதிராக்கிளவியின் முள்ளெயிறிலங்க மதுரை மூதூர் யாதென" வினவினுள். அவள் தன்

வண்ணச்சீரடி மண்மகள் அறியாளன்ருே? பின்னர் அவர்கள் நெடுந்தொலைவு சென்று ஐயைகோட்டத் தொருபால் அமர்ந் திருக்கையில் "முழங்குவாய் சாலினி" ஒருத்தி கண்ணகியைப் பார்த்து "கொங்கச் செல்வி குடமலையாட்டி" என்று புகழ்ந் துரைக்க, "தன் புகழ்கேட்டார் போல் தலை சாய்ந்து" கோவலன் பெரும்புறத்தொடுங்கி நின்ருள் கண்ணகி என்று இளங்கோவடிகள் கூறும்போதும் அவளுடைய மெல்லியலையே விளக்குகின்றனர்.

ஆய்ச்சியர் வீட்டில் அடைக்கலம் புகுந்த கண்ணகி ஒரு பகற்போது இல்லறம் நடாத்தியதை மிக அழகாக இளங்கோவடிகள் எழுதிக் காட்டுகிருர். கண்ணகி உணவு சமைத்த முறையும், தன் கணவனுக்கு இட்ட முறையும், தற்கால நாகரீகப் பெண்கள் கற்றுப் பயிலுதற்குரியன. உணவமைத்து, வெள்ளிய பனவோலையால் கைபுனைந்தியற்றிய தவிசில் கோவலனை இருத்தி, தரையிற் தண்ணீர்தெளித்து கையினல் தடவி, அதன் மேல் குமரிவாழையின் குருத்தை விரித்தனள். அவ்வெள்ளிய தோட்டில் அன்னத்தையிட்டு "அமுதமுண்க அடிகள் ஈங்கென" என்றனளென இளங்கோ வடிகள் எழுதும்போது, பண்டைத் தமிழர்களின் இல்வாழ்க்கை யினழகின் ஒருபகுதியை நாம்கண்டு இன்புறுகிருேம். இதுவரை, இளங்கோவடிகள் கண்ணகியின் மென்மைத்தன்மையையே சிறப்பாக எடுத்துக்காட்டினர்

மிகவும் மென்மைத்தன்மை வாய்ந்தோர் தமக்குரிய பொருள் தன்னிடத்திலிருந்து கவரப்பட்ட போதோ, தான் உயிரினும் மதிக்கும் மானத்தை இழக்க நேரிடும்போதோ, அத்தகைய வேறுசமயங்களிலோ, மென்மைத்தன்மையைவிட்டு மறத்தன்மைகொள்வது இயற்கைக்கு மாருனதன்று. அவ்வித மாகவே மெல்லியலாளான கண்ணகியும் தன் கணவனை இழந்த அவலம் மேற்கொள்ள, குற்றவாளியல்லாமலிருந்தும், கொல்லப்பட்டான் என்ற அநீதியால் ஒருபுறம் ஆத்திரம் பொங்க, தன்மெல்லியல் தன்மை நீங்கி இயற்கையில் வீரப் பெண்மணி வேடம் பூண்டாள். வீரமும் கற்பும் வேறு பட்டதுவோ? "படுமகன் கிடக்கை காணூஉ ஈன்ற ஞான்றி னும் பெரிதுவக்கும்" தமிழ்ப் பெண்டிர்க்கு வீரம் இயற்கையன்றே? ஆகையினல் கண்ணகியிடம் தூங்கிக்கிடந்த வீரம் இப்பொழுது கோவலன் இழவால் தட்டியெழுப்பப் பெற்று வெளித்தோன்றிற்று.

கோவலன் வெட்டுண்டான் என்ற செய்தியை ஆய்ச்சியர் வாயிலாய் அறிந்து "கண்ணிழந்தான் பெற்றிழந்தான்" என துடிதுடித்து பாரின்மிசை வீழ்ந்து புறண்டாள். தம்துணைவரை யிழந்து "கைம்மை கூர்துறை மூழ்குங் கவலை மகளிரைப்" போலல்லாது, கோப்பெண்டு போன்றவள் கண்ணகி, ஆனால் தன் கணவன் கள்வனல்லன் என்றுலகறியச்செய்யும் பெருங் கடமை பூண்டவளாகையால், சிறிது காலம் இவ்வுலகில் வாழத் துணிந்தாள். இடைச்சேரியை விட்டு, கண்ணகி மதுரைக்குள் புகுந்து, "நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாதுப் பத்தினிப் பெண்டிரிருந்த நாடென்னும்" நல்லுரையை அறிந்தவளாத லாலும், தான் பெண்ணாதலாலும், "பெண்டிரும் உண்டு கொல்! பெண்டிரும் உண்டுகொல்! எனத்தொடங்கிப் பலவாறாய் அரற்றித் துயர் வாய்ப்பட்டு அலருவாளாயினாள். பின்னர் கொலைக்களத்தை மருங்கிருந்தோர் காட்ட, அங்கு சென்று "கண்டாள் அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம்."

கொலைக் களத்திலிருந்து கண்ணகி பாண்டியன் கோயி லுக்குச் செல்கின்றாள். துயரமும் வீரமும் மேற்கொள்ள, தலைவிரிகோலமாய்க் கண்ணீரும் கம்பலையுமாய்த் தோன்றும் கையறு நங்கையைக் கண்டு "அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப் பீடமேறிய மடக்கொடி வெற்றிவேற் றடக்கை கொற்றவை"யோ என்று வாயிற்காப்போன் அஞ்சி னதில் வியப்பில்லை. ஆனால் அவன் "கொற்றவை அல்ல," "பேஎரங் கிழித்த பெண்ணுமல்லள்," என்று வெளிப்படை யாய்க் கூறியும், இக்கால இழிதகவுடைய தமிழ் மாக்கள் நாடகமேடையில் கண்ணகியைக் காளியாய் மாற்றி, பஞ்சின் மெல்லடிப் பாவையைப்பாண்டியன்மேல் பாயச்செய்யும் மடமை யைத்தான் நினைந்து உளம் நையவேண்டியிருக்கிறது. வாயில் வந்து கோயில்காட்ட, பாண்டியன் அவ்வீரமும் துயரமும் மன் றுடும் உருவத்தைக் கண்டபோழுதே தோற்றான். இருப்பினும் பாண்டியன் தன் சொல்லில் அன்பும் இரக்கமும் ததும்ப, "நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய் யாரையோ நீ மடக்கொடி யோய்," என வினவினன். அரசு பிழைத்தவன் பாண்டியன் தானென்று சுட்டுதற் பொருட்டு கண்ணகி தன்னாட்டரசர் அரசு பிழைத்தறியார் என வேறுபடுத்திக் காட்டினாள். சேக் கிழாரும் "செம்பியர் செங்கோலன்ன தென்னவன் கூன் நிமிர்ந்த" தென்றார் அல்லவா? கண்ணகி தன் சிலம்பின் அரி யால் கணவன் குற்றமற்றவன் என்றுணர்த்தியவுடன் பாண்டி யன் உயிர்பிரிந்தது. தன்னுயிர்கொண்டு அவனுயிர் தேடுவான்

போல் கோப்பெருந்தேவியும் மாண்டாள். மதுரையும் தீக்கிரை யானது.

இனி, வீரம் சிறிது நீங்கச் சோகம் தலைப்பட்டது. தன் கணவனை வானோர் தங்கள் வடிவிலாவது காணும்வரை தனக்கு இருத்தலுமில்லை, நிற்றலுமில்லை எனக்கூறி மேலவாயிலை அடைந்தனள். அவ்விடத்தில் இளங்கோவடிகளுக்கே துயரம் மிக்குற, கண்ணகியின் வாயிலாய்க் கூறுகின்றனர்:—

"கீழ்த் திசை வாயிற் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென"

இவ்விடத்தில் சிலப்பதிகாரத்தின் அவலச்சுவை ஓர் உன்னத நிலையை அடைந்து படிப்போர் உள்ளங்கலங்க தம்மையறியாது கண்ணில் நீர்பெருகும் தன்மைத்தாய் உளது.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த வீரமாபத்தினிக்குச் சேரன் செங்குட்டுவன் வஞ்சியில் கோயிலெடுத்தான். ஆனால் "இக்கற்புக் கடன் பூண்ட தெய்வத்தின்" கோயில் தமிழ் நாட்டில் இப்பொழுது எங்கேனும் உளதா? தமிழ்ப் பெண்டிரும் நம் கற்பரசியை மறந்தனரே! பலவேறு சிறு தெய்வங்களைத் தொழுதலைவிட்டு இனிமேலாவது நம் தமிழ்ப் பெண்டிர் இம் "மழைக்குதவும் பெருங்கற்பின்" மடவாளை ஆண்டுக்கொரு முறையேனும் நினைந்து வணங்குவார்களா?

"ஆலங்குடி" என வழங்கப்பெறும்

திருவிரும்பூளையுடையார் கோவில் கல்வெட்டுக்கள்

A. R. No. 165 of 1894

On the North wall of the Apathsahayesvara Shrine AT ALANGUDI.

திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தமிழாசிரியர்.

1. ஸ்வதிஸ்ரீ [11*] பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தரப் பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத்திரு நிலமடந்தையொடும் ஜெயமகளிருப்ப கனவரைமார்வந்தனதெனப் பெற்றுத் திருமக ளொருதனியிருப்பக் கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்ப்பினளாகி விருப்பொடு நாவகத்திருப்பத் திசைதொறுந் திகிரியொடு செங்கோல் நடப்ப அகிலஹுவநமும் கவிப்ப—தொர் புதுமதிபொல் வெண்குடைமீமிசை நிற்பக் கருங்[க]விமியாளித்து வனபிலத்திடைக் கிடப்பக் குளத்திடை [1]தெலிங்கவிமன் விலங்கல்மிசை யெறவுங் கலிங்க பூமியைக்கனைஎரி-

2. பருகவும் ஐம்படைப்பருவத்து வெம்படை தாங்கி வெங்கை மண்டலத் தாங்கினிதிருந்து வடதிசை யடிப்படுத்தருளி தென்திசைத் தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப வெதமும் மெய்மையும் ஆதியுகம் பெற தலைத்தலை சிறப்ப வந்தருளி வெலக்கரும் பொற்றவியாணை பார்[த்]திவர் சூட நிறைமணி மகுட முறைமையிற்சூடி மன்னுயிர்க் கெல்லாம் மின்னுயிர்த் தாய்பொற் தன்னளிபரப்பி தனித்தனி பர[ந்து] மண்முழுதுங் களிப்ப மநுநெறி வளர்த்து தன்கொயிற் கொற்றவாயிற் புறத்து மணிநாவொடுங்—

3. க முரசுகள் முழங்க விஜயமும் புகழும் மெல்மெலொங்க ஊழிஊழி இம்மாநிலங் காக்கத் திருமணிப் பொற்றொட்டெழுது பத்தாண்டு வருமுறைமுன்னெ மன்னவர் சுமந்துள்ளிறை நிரைத்துச் சொரிந்த செம்பொற்குவையாற் தன் குலநாயகன் தாண்டவம் புரியுஞ் செம்பொனம்பலஞ் சூழ் திருமாளிகையும் கொபுரவாயிற்கூட சாளரமும் உலகுவலங்கொண்ட

1 Read தெலுங்க வீமன்

வொளிவிள[ங்]கு நெமிக்குலவரை யுதயக் குன்றமொடு நின்றெனப் பசும்பொன் [1]மெ[ய்]ந்து [2]பநிவளர்ப்பிடமும் விசும்பொளி தழைப்ப விளங்குபொன் மெய்ந்து இருநி—

4. [லந்த]ழைப்ப இமையவர் களிப்ப பெரியதிருநாள் பெரும்பெயர் விழாவெடு முயர் புரட்டாதி யுத்திரட்டாதியி லம்பலநிறைந்த வற்புதக் கூத்தர் இன்புரவாழ வெழுந்தருளு தற்குத் திருத்தெர்க்கொயில் செம்பொன்மெய்ந்து பருதிரள் முத்தின் பயில்வடம் பரப்பி நிறைமணி மாளிகை நெடுந்திருவிதிதன் திருவளர் பியராற்ச் செய்து சமைத்தரிளிப் பைஞ்பொற்குழித்த பரிகலமுதலாற் செம்பொற்க கற்பகக்தொடு பரிச்சின்நமும் அளவிலாதந வொளிபெற வமைத்துப் பத்தாமாண்டிற் சித்திரைத்திங்கள்த்தம்பெ—

5. ற்ற ஆதித்த வாரத்துத் திருவளர்மதியின் த்ரயொதஸிப்பக்க இன்ந்த பலவுமிநிது சமைத்தருளி தன்நொரு குடைநிழற்தல முழுதுந்தழைப்பச் செழியர் வெஞ்சுரம் புக செரலர் கடல்புக அழிதருசிங்களரஞ்சி நெஞ்சலம(ா)ர கங்கர் திறையிடக் கன்நடர் வென்நிடக் கொங்கரொதுங்கக் கொங்கணர் சாய மற்றெ[த்]திசைமன்நருந் தன்தமக்கரணெந திருமலர்ச் செவடி யுரிமையிலிறைஞ்சத் தெரிவையர் திலதந்தியாகபதாகை புரிகுழல் மடப்பிடி புநிதகுணவநிதை திரிபுவநமுழுதுடையாளிவன் திருவிளத்தரி—

6. [ள்முழுதுமு]டையாளெந உடநிருப்ப நெடுமாலகத்-துத் திருமகள்ளிருந்தென மாதர் மடமயில் பூதலத்தருந்துதி அரணியகற்பிற் தரணிமுழுதுடையாள் இவன்திரு மணிமார்வத் தருளுடநிருப்பச் செம்பொன் விரஸிஂஹாஸநத்துத் திரிபுவன முழுதுடையாளொடும் விற்றிருந்தருளிய கொப்பர கெஸரிபத்மரான திருபுவந சக்ரவர்த்திகள் ஸ்ரீவிகரம சொளதெவர் பதிநொன்றுவது நாளஞ்பத்தஞ்சிநால் விக்ரமசொளபுரத்துக் கொயிலி நுள்ளாலெ அகளங்கள்மண்டபத்துப் பள்ளிக்கட்டிலின் மெலெழுந்கரு—

7. ளியிருந்து உடையார் திருச்சிற்றம்பலமுடையா........ யாண்டு பத்தாவது நாள் நூற்றொருபத்தஞ்சிநாலும் நாள் முன்நூற் றொருபத்து முந்றிறுலும் பெரும்பற்றப் புலியூரி லெழுந்தருளி இருந்து கெட்டருளி நிச்சயித்தருளிநபடியெயாளுடையார் நித்தற்படி அமுதுசெய்தருளமிநுக்குப் பொநகப்

---

1 Read மேய்ந்து. 2 Read பணிவளர் பீடமும்.

பழுவரிசிக்கு வெண்டும் பொநகப் பழநெல்லுச் சுத்தமலிவள நாட்டு முடிச்சொளநாட்டுச் சனநாதச் சருப்பெதிமங்கலம் கடமைக்கு அளந்து முதலான பொநகப்பழநெல்லு..........ந ....டவதாகவும் இ—

8. ன்நெல்லு இவ்வூசவரெ ஆளிட்டு.............தொறும் சந்த்ராதித்யவற் ஆளுடையார் கொயிலில் பொன்மெய்ந்த பெருமாள்பண்டாரத்திலெ செப்புக்கால் திருச்சிற்றம்பலமு டையாநாலெ அளக்கக் கடவார்களாகவும் இப்படி ஜநநாயச் சருப்பெதிமங்கலத்து உடையார் திருவிரும் பூளையுடையார் கொயிலிலே கல்வெட்ட திருவாய் மொழிந்தருளிநாரென்று திருமந்திரஒலைநாயகம் ஜயங்கொண்ட சொழமண்டலத்து புலி யூர்க்கொட்டமான குலொத்துங்க சொழவளநாட்டுப் பெ.... நாட்டு நெற்குன்றத்து—

9. நெற்குன்றங்கிழான் அரயன்தருவு..........ழுத்திட்ட செய்யும்படியும் புரொவரிதிணைக்களங் கணக்கெழுதுவி.......... றுக்குக்க..........ராஜராஜப் பாண்டிநாட்டு ராஜெந்திரசொழவள நாட்டு தென்பரப்பு நாட்ட மூலநல்லூர்கிழவன் வெளாங் தில்லை நாயகநாந வெசாலிப் பெரயரும் அருள்மொழிதெவ வளநாட்டு வலிவலக்கூற்றத்து நாவலூருடையான் செல்வன்(ப்) புற்றிடங் கொண்டாநாந வயிராதராயரும் புரவரித் திணைக்களம் கணக் கெழுதுவித்தான் ஜயங்கொண்டசொழ[ம]

10. ண்டலத்து மணவிக்கொட்டத்து மணவில்நாட்டு...... சொழதெவன் திருமாலயந்துறையுடையாநாந மிழலைவெளாநும் செந்தசிநரங்கொற்[ற]ன் ஆடவலான் கடம்பனும் ஜயங கொண்டசொழவளநாட்டு திருவழுந்தூர்நாட்டுக் கூடலூருடை யான் சிவலொகமுடையநாந விரசொழப் பல்லவரயனும் ராஜ ராஜவளநாட்டு எமப்பெர்கூற்றத்து பொய்க்குடையான் திரு வையாறன் பொன்னம்பலக் கூத்தநாந விக்ரம சொழஉலக வெளாநும் புரொவரிதிணைக்கள..........ஜியங்கொண்டசொழ—

11. மண்டலத்து ஆமூர்கொட்டத்து செங்குன்றநாட்டுச் சிருகுன்றத்துச் சிருகுன்றங்கிழான் பரமெஸவரன் காமநும் ஜயங்கொண்டசொழவளநாட்டு குறும்பூர்நாட்டு அரயன் செங் கரநாராயணனும் உய்யக்கொண்டவளநாட்டு பாம்பரநாட்டுச் சிறுகுடையான் குமரவிடங்கநாதித்ததெவநும் ராஜெந்திர சொழவளநாட்டு புறங்கரம்பைநாட்டு இழிநூருடையான் வெத

வநமுடையாநாந நெறியுடைச் சொழப்பல்லவரையநும் முக வெட்டி ஜயங்கொண்டசொழமண்டலத்து மணலிக்கொட்டத்து கொட்ட..............

12. ....லநாட்டு...பரசாலிகிழவன் முடிகொண்டான் ருசெ நதரகொவும் ஜயங்கொண்டசொழவளநாட்டுக் குறும்பூர்நாட்டு நாகமங்கலமுடையான் வெளான் தாமொதிரநும் அருமொழி தெவவளநாட்டு வென்மலிநாட்டுப் பழயனூருடையான் சொம தெவநனையஞ்செய்வாநும் ராஜெந்தரசொழவளநாட்டு ஆர்வலக் கூற்றத்து பு......ஆருடையான் பெற்றான் மாநெந்துகய்யநும் எழுத்திட்ட பழவரிப்படியும் ஆளுடையாற்க்கு நாளொன்றுக்கு அரு.................................நி........

13. ....தூணியாக நாள் முன்நூற்றறுபத்தஞ்சுக்கு மிநுக்குப் பொநகப்பழவரிசி நாநூற்றெண்பத்தறுகலனே இரு தூணியும் மறுவரிசிகலத்துக்..........றுணியொருநாழி முவுழக் காக நாளொன்றுக்கரிசி குறுணியஞ்ஞாழியும் குத்துவரிசி கலத்துக்கு அரிசி குறுணியிருநாழி முவுழக்கெ யிருசெவிடாக நாளொன்றுக்கரிசி குறுணி யருநாழி யுழக்காழாக்கெ யிரு செவிடும் ஆக நாளொன்றுக்கு வரிசியாலெறுமரிசி முக்குறுணி முன்நாழியுழக்காழாக்கெ யிருசெவிடாக நாள் முன்நூற்றறு பத்தஞ்—

14. சுக்கரிசி நானூற்று........கலநெ பதக்கொருநாழியும் ஆக அரிசி ஐந்நூற்றுத் தொன்னூற்றுக்கலனெ இருதூணிப் பதக்கொரு நாழியிநால் இரட்டி நெல்லு ஆயிரத்தொருநூற் றெண்பத் தொருகலனெ தூணியிருநாழியும் சுத்தமலிவள நாட்டு முடிச்சொழநாட்டு ஜநநாதச் சருப்பெதிமங்கலத்துக் கடமைக்களந்து முதலான பொநகப்பழநெல்லிலெ இவ்வூரவரெ ஆளிட்டு எடுப்பித்து ஆட்டாண்டுதொறும் சி....து....டையார் கொயிலில்ப் பொன்மெய்ந்த பெருமான்பண்டாரத்திலெ செ... லமுடையாநாலெ அளக்க கடவார்களாகவும் இந்த நெல்லுக்குச் சத்—

15. தக்கூலி முன்பு செலவிட்டுவரும்படியெய் செலவிடக் கடவதாகவும் திருவாய்மொழிந்தருளினமையில் இப்படி திரு விரும்பூளையுடைய மஹாதெவர் கொயிலிலெ கல்வெட்டுவது இவை பொரொவரி திணைக்களநாயகம் சிறுகுடையான் எழுத்து இவை பொரொவரி திணைக்களநாயகஞ் சிறுகுறைகிழான் எழுத்து ||| — இவை பொரொவரி திணைக்களநாயகம் முக்த

நூருடையான் எழுத்து ||| — இவை பொரோவரி திணைக்கள நாயகம் குறியுடைச் சொழுப்பல்லவரையன் எழுத்து இவை பொரோவரி திணைக்களத்து முகவெட்டி பாசாலி கிழவன் எழுத்து || உ இவை நாங்கொற்ற..................இ............

16. மூலவெளான் எழுத்து இவை பொரோவரி திணைக்களத்து முகவெட்டி நாகமங்கலமுடையான் எழுத்து இவை வைராகராயன் எழுத்து உடையார் திருச்சிற்றம்பலமுடையார்க்கமுது செய்தருளப் பொநகப் பழநெல்லெடுக்கவ............ ....றும் இப்படி கல்வெட்டவென்று ஸ்ரீவாதஞ்செய்தருளிந திருமுகமும் செய்யும்படியும் வந்திடத்து அதிகாரம் பெரும் பாண்டூர் குமாரதத்தபட்டனும் முடும்பை புண்டரீகாபட்டனு சதுமா................விருந்து பெருங்குறிகொட்பித்தன் பெழுதி கூடிந குறைவற கூடியிருந்து திருமுகப்படி.........................

17. பணித்தார் பெரிய கரணத்தர் குரவசெரிக் கொவிந்த பட்டங் பணியாலும்...............த்து களத்தூர் கருவரைபால் நின்றூன்பட்ட[ன்]பணியாலும் வ[ா]ஜஸகியரில் சிநராத்துத் தாமொதிரபட்டன் பணியாலும் கல்வெட்டியது || — இப்படி விண்ணப்பஞ்செய்து திருவாய்மொழிந்தருளத் திரு.......மும் செய்யும்படியும் கொண்டுவந்து கல்வெட்டுவித்தார் ஆளுடையார் கொயில்க் கால்செய்யும் நாணம்பி திருவெண்காடுடையநாந... ....ம்பலங் கொயில்கொண்டான் கணபதியாந பொன் மாளிகை பிச்சநும் கண்காணி..............இப்படி...................இக் கொயில்* ....

* The last line is much damaged.

தொல்காப்பியம்

வித்வான், திரு. A. கிருட்டினமூர்த்தி அவர்கள்,
ஐயம்பேட்டை.

தொல்காப்பியம் பல்லாயிர மாண்டுகளுக்கு முன்பிருந்து தமிழர்களுக்குக் கிடைத்த அழியாத நூற்செல்வங்களுள் தலைமையான தொன்று. உலகமொழிகளிலெல்லாம் உரை நடையிலன்றி முதன்முதலாகச் செய்யுட்களாலேயே நூல்கள் யாவும் இயற்றப்பட்டன. செய்யுட்கள் தோன்றிப் பல்லாயிர மாண்டுகளுக்குப் பிறகுதான் உரைநடை தோன்றிற்று. மொழி களிலெல்லாம் மிகப் பழைமை வாய்ந்த தமிழ்மொழியும் இம் முறைக்கு மாறுபட்டதன்று. அம்முறைப்படியே பண்டைய நூல்கள் யாவும் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டன. அவற்றுள் தொல்காப்பியமும் ஒன்று. அதைவிடப் பழைமை யான நூல் இன்றைய தமிழுலகில், இதுவரை கிடைக்கவில்லை. செய்யுள் செவிக்கும், உளத்திற்கும் இன்பந்தருதலின், இயற் கையை விழைந்த பண்டைத் தமிழர்கள் அச்செய்யுளாலியன்ற நூல்களை விரும்பிப் போற்றினர். அன்றியும் அக்கால மக்கள் செய்யுளைக் கொண்டு, நூல்கள் எழுதினமைக்கு முதன்மையான காரணங்கள் இரண்டு: (1) இயல்பாகவே பரந்துபட்ட வேலையைச் சிறப்பான முறையில் சுருக்கி முடிக்க வேண்டுமென்ற எண்ணம்; (2) தற்காலம் போல அச்சுப்பொறிகளின்றி அனைவரும் ஓலைச் சுவடிகளில் எழுதவேண்டி வந்த இன்னல் என்பன. தங் காலத்தில் வாழ்ந்த மக்களும், தமக்குப் பிற்காலத்தில் வரும் மக்களும் கற்றுணரவேண்டுமென்ற விரிந்த கருத்துடன் புலவர் யாவரும் அக்காலத்தில் நூல்கள் எழுதத் தொடங்கினமையின், இடர்ப்பட்டாயினும் மேற்கண்ட முறைக்கொப்ப நூல்களை வரைவராயினர். அவ்வாறு வரைந்த அவர்களுக்கு ஏற்பட்ட காரணங்கள் இரண்டென்றால் ஆசிரியர் தொல்காப்பியனாருக்கு முதன்மையான காரணங்கள் மூன்று இருந்தன. அம்மூன்றில் முதல் இரண்டும் முற்கூறப்பட்டனவேயாக, மூன்றாவதொன்று, சூத்திரயாப்பால் இலக்கண விதிகளைச் சுருக்கி முடிக்க வேண்டி வந்த இன்றியமையாமையாகும். இன்னும் சற்று விரிவாகக் கூறினால், மற்றைய இலக்கியங்களை போல் படித்தவுடன் மூடி விட்டும், நினைந்தவுடன் திறந்து பார்த்தும் பயன்படுத்தக்கூடிய முறையிலன்றி, எக்காலத்திலும், எவ்விடத்திலும் எல்லா

நூலுக்கும் பொதுவிதியாய் அமைந்து எல்லோர்க்கும் இன்றியமையாது விளங்கிய இலக்கணநூல் விதிகள் யாவும், அனைவருளத்திலும் அசையாது அமையுமாறு சுருங்கிய முறையில் எழுதப்பட்டன எனலாம். அவ்வாறு அனைவருளத்திலும் அமைய வேண்டுமாயின், எல்லா முறைகளையும் மிகச் சுருக்கமாக, ஆனால் பொருட் செறிவுடையனவாக வைத்து விளக்கக் கூடிய ஒருநடையே கையாளப்படல் வேண்டும். உரைநடையைக் காட்டினும் இயற்கையான செய்யுட்கள் பொருட் செறிவும், சொற்சுருக்கமும் உடையனவாம். அச்செய்யுளை விடச் சூத்திர யாப்பு என்ற ஒன்று இன்னும் திறம்படப் பொருட்களை விரித்தும், சுருக்கியும் கூறற்கேற்ற பாவகையாம். ஆதலின், ஆசிரியர் தொல்காப்பியனார், "ஆடி நிழலின் அறியத் தோன்றி—நாடுத லின்றிப் பொருணனி விளக்கும்" யாப்பென்று அந்நூற்பாவைப் புகழ்வாராயினர். இத்துணைச் சிறப்புடைமையாலும், முன்னோர் முறையைத் தழுவியமையாலும் ஆசிரியர் தொல்காப்பியனார் தாமெழுதிய இலக்கணநூலைக் சூத்திர யாப்பால் வரைந்து போயினர்.

இனி, தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்திலேயே தமிழினின்றும் ஒரு கிளைமொழி பிரிந்துசென்றது. அது வடுகு எனப்பட்டு வடவேங்கடத்துக்கப்பால் வழங்கிவந்தது. "வடதிசை மருங்கின் வடுகு வறம்பாகத் தென்றிசையுள்ளிட்டெஞ்சிய மூன்றும்" என்ற காக்கைபாடினியார் கூற்று தமிழ் நாட்டின் வடவெல்லையில் வடுகு வழங்கியதென்பதைக் குறிப்பிடுகின்றது. அகநானூற்றுச் செய்யுளொன்று இவ்வடுகநாடு வேங்கடத்துக்கப்பால் இருந்ததாகக் கூறுகின்றது. தொல்காப்பியப் பாயிரச் சூத்திரம் வடவேங்கடம் தென்குமரிக் கிடைப்பட்டதே தமிழ் வழங்கும் பெருநிலம் எனக்கூறுகின்றது. இன்றைய தெலுங்குமொழி பல்லாயிரமாண்டுகட்கு முன்பே வடுகு என்ற மொழியாக வழங்கியதென அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே தொல்காப்பியனார் காலத்தில் தமிழ்நாட்டின் வடவெல்லையாக விளங்கிய வேங்கட மலையையொட்டி வடுகு மொழி வழங்கி வந்தது என்பதும், அது தமிழ்மொழியினின்றும் பிரிந்தமொழி என்பதும் தெளிவாதல் நன்கு புலனாகும். இவ்வாறொருமொழி தமிழினின்றும் பிரிந்தமைக்கு மற்றொரு முதன்மையான காரணமு முண்டு. என்னையெனில், சிறிதுசிறிதாக வடநாட்டினின்றும் தமிழ்நாடு புகுந்த ஆரியர்கள் தமிழ்நாட்டின் வடஎல்லையில் முதன் முதலில் தங்குவாராயினர். அவ்வாறு தங்கிய காலத்தில் அவர்களுடைய ஆரியமொழியும்,

தமிழ்மொழியும் விரவத்தொடங்கி, அது முற்றி வளர்ந்த காலையில் தமிழ்மொழி தன்னுடைய எழிலுருவில் ஒருபகுதியை இழந்துவிட்டது. அவ்வாரிய மக்கள் தென்றமிழ் நாட்டில் நாளடைவில் பல்கிவந்து அவர்தம் செல்வாக்கு மொழியின் மீதும் பாய்வது கண்ட தமிழ்ப்புலவர்கள், அவர்களுடைய வடமொழிச்சொற்கள் தமிழில் புகாத வகையில் எத்துணை முயன்றும் ஓரளவாவது கலக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆதலின், அக்காலையில் எழுதப்பட்ட தொல்காப்பியத்தில், அதன் ஆசிரியர், "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" எனச் சூத்திரம் செய்வாராயினர். எனவே, தொல்காப்பியம் எழுந்த அப் பழைய நாளிலேயே தமிழில் வடமொழியாளர் செல்வாக்கு புகுந்துவிட்டதென்றும் அதனால், தமிழ் மொழியினின்றும் 'வடுகு' என்ற ஒருமொழி பிரிந்து சென்றதென்பதும் அறியக் கிடக்கின்றன.

இனி, தொல்காப்பியம் இலக்கணமாக எழுதப்பட்ட தாயினும், அது இலக்கண மாத்திரமல்ல—இலக்கியமுமாகும். இலக்கியம் என்பது, அது எழுதப்பட்ட காலத்து வாழ்ந்த மக்களின் அரசியல், நாகரீகம், கூட்டுறவு, பொருளியல், உளப் பாங்கு முதலான எல்லா இயல்புகளையும் நேர்முகமாகவோ, அல்லது மறைமுகமாகவோ தெள்ளத்தெளிய கண்ணாடிபோல் எடுத்து விளக்குவதாகும். சுருங்கக் கூறினால் "இலக்கியம்—வாழ்க்கையின் கண்ணாடி" என்றுதான் கூறவேண்டும். தொல் காப்பியத்தில் எழுத்தும், சொல்லும் இலக்கணப் பகுதியாக விளங்கினாலும், பொருளதிகாரத்தில் பெரும்பகுதி, தமிழர் களின் அரசியல்முறை, இயற்கைவாழ்வு, நாகரிகம், கூட்டுறவு நிலை, பொருளியற்செய்திகள் முதலாக மற்றுமுள்ள பலவேறு துறைகளையும் செவ்விதின் எடுத்து விளக்குகின்றது. இப் பகுதிகளை யெல்லாம், அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், மரபியல் முதலான இயல்களால் ஆசிரியர் வைத்து விளக்குகின்ற முறை உள்ளுந்தோறும், உள்ளுந்தோறும் உவப்பூட்டுகின்றது. இம் முறையில் வைத்து வேறு எந்த மொழியினும், நூல்வரைந்த தாக அறிஞர் கூறவோ, அல்லது நூல்வழியாகவோ, நாம் கேட்கவுமில்லை; காணவுமில்லை. இலக்கணமென்றால் மொழியின் இயல்புகளை அறிய முடியுமேயன்றி, மக்களின் வாழ்வுகுறித்து விரிவாக யாவும் அறியவியலாது. அங்ஙனமாகவும், தொல் காப்பியம் இலக்கணப் பகுதியை விளக்குவதன்றி மக்கள்

நாகரிகத்தை எடுத்துக் காட்டுவதால் இலக்கியமாகவும் விளங்கு கின்றது. எனவே, தொல்காப்பியம் இலக்கண மாத்திரமல்ல— இலக்கியமாகவும் விளங்குகிறது.

தொல்காப்பியர் காலத்து மக்கள் தங்கள் நாட்டினை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐந்துவகையாகப் பிரித் தனர். அஃதாவது இயற்கையின் கூறுபாட்டை உணர்ந்து அதற்கேற்ப நிலங்களை ஐம்பிரிவாக்கினர். அந்நிலத்துறைந்த மக்கள், ஆங்காங்குள்ள இயற்கையமைப்புக்குத் தக்கமுறையில், தாங்கள் கொண்டொழுகிய தொழில், நாகரிகம் முதலியவற்றிற் கேற்பப் பல பொதுப் பெயர்களாலும், சிறப்புப் பெயர் களாலும் அழைக்கப்பட்டனர். அவற்றுள் கானவன், வேட்டு வன், ஊரன், துறைவன், மறவன் என்பனவும் சிலவாம். மற்றும், ஒவ்வொரு நிலப்பகுதியினும் அவ்வந்நிலத்து மக்கள் எவ்வகை உணவைக் கொள்ளுகின்றனர், எவ்வகைத் தொழில் புரிகின்றனர், அங்கு சிறந்து விளங்கும் விலங்கு, மரம், புள், பறை, இசை முதலியன யாவை என்பனபோன்ற யாவும் கருப்பொருள் என்றும், அங்கு நிகழும் ஏதற் சிறப்புடை நிகழ்ச்சிகள் உரிப்பொருள் என்றும் வைத்துப் பாராட்டப் படுகின்றன. இவற்றைச்சிறப்பித்தே பண்டைப் புலவர்களும் தத்தஞ் செய்யுட்களைப் பாடுவாராயினர். இவ்வாறு நிலங்களைப் பகுத்து அவற்றின் தன்மைகளை இலக்கியத்தில் அமைத்து அழகுபடுத்திய முறை வேறு எங்கும், எம்மொழியினும் அமையாத பெருஞ் சிறப்புடையதென்று அறிஞர்களால் தற் காலத்தினும் பாராட்டப்படுகின்றது. தற்காலத்தில் "உலக நூல்" (Geography) எனப்படும் நூல்களில் ஒவ்வொருநாட்டு மக்களின் நாகரிகம், நாட்டினியல்புகள், தட்பவெப்பநிலைகள் முதலியவெல்லாம் சிறப்பித்துக் கூறப்படுகின்றமை போல, நந் தொல்காப்பியத்தினும், நிலனும், பொழுதும், அவற்றி லுறையும் மக்களியல்பும், நாகரிகமும் பிறவும் விரிவாக உணரக் கிடத்தலால் தொல்காப்பியம் ஒரு "உலகநூல்" என்றும் கூறற்குரியதாகும். இனி, தொல்காப்பியம் மரபியலில், ஓரறி வுயிர் முதலாக ஆறறிவுயிர் ஈறாகவுள்ள உயிர்களின் பாகு பாடுகளையும், அவ்வவற்றிற்குரிய சிறப்பியல்புகளையும், அவ் வியல்புகளையுடைய உயிர்களிற் சிலவற்றின் பெயர்களையும் பொருட்செறிவாக—சொற்சுருக்கமாக ஆசிரியர் தொல்காப்பிய னார் எடுத்துக் கூறியிருக்கின்றமை பெரிதும் பாராட்டத்தக்க தொன்றாம். உயிர்களின் இயல்புகளை ஓரளவுவகுத்துக்கூறுதலின் அஃது உயிர்நூலாகவும் உதவுகின்றது என்பது மிகையன்று.

இனி, மெய்ப்பாட்டியலில், "நகையே அழுகை இளிவரல் மருட்கை—அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்—றப்பா லெட்டே மெய்ப்பாடென்ப" என்னும் சூத்திரத்தில், மக்கள் உளத்தில் தோன்றும் சுவைகள் புறத்தில் எவ்வகையில் வெளிப் படுகின்றன என்பதை எட்டுவகையாக வகுத்துரைத்திருக் கின்றார். எடுத்துக்காட்டாகக் கரும்பு தின்பானொருவனை எடுத்துக் கொள்வோம். அதனைத் தின்னும்போழ்தில் தின்னப் படும் கரும்பும், அதன் சுவையுணரும் நாவும், அதனால் உளத்தில் தோன்றும் நிகழ்ச்சியும், அந்நிகழ்ச்சி வெளியில் புலப்படும் வகையும் ஆகிய நான்கு செய்திகளும் இயற்கையிலமைந்த எட்டுவகை மெய்ப்பாட்டொடு மாறுபட்டுறழ, முப்பத்திரண்டு வகையாக வருகின்ற முறைகளை மிகமிக அழகாக எடுத்தோது கின்றார். அதனை அடுத்துத்தலைவன், தலைவியர் உள்ளநிகழ்ச்சி களையும், அவ்வவர்க்கு ஆவன ஆகாதனவாய இலக்கணங் களையும், ஏனையவற்றையும் எடுத்தியம்புகின்ற விடங்களில் உளநூலின் அடிப்படையான உண்மைகளை உணரவியலும். ஆதலின், தொல்காப்பியம் உயிர்நூலாக மாத்திரமன்று, உள நூலாகவும் உதவுகின்றது. இங்ஙனம் ஆராயின், அது சொற் பொருள் தெரிவிக்கும் நிகண்டு போலவும், ஒலிநூல் போலவும், உலகியல் கூறும் சிலவிடங்களில், தத்துவநூல் போலவும், இயற்கைநூல் போலவும் கற்போர்க்கு இன்பந்தருவது நினைத் தொறும் நினைத்தொறும் வியப்பிறந்தன்றே.

இவ்விடத்தில் சிலர் சிலவினாக்களை எழுப்புதல்கூடும். என்னையெனில், இலக்கணம்பற்றியெழுந்த ஓரேநூலில், உளம், உயிர், உலகம் பற்றிய பலவேறு உண்மைகளை எவ்வாறு எடுத் தியம்புதல் இயலும்? தனித்தனியே தற்காலத்தில் பரந்து விரிந்து செல்லுகின்ற பெருநூல்களை ஓரே நூலில் எங்ஙனம் அடக்கிக் கூறமுடியும்? என்பன. தற்காலத்தில், அதாவது பல்லாயிரமாண்டுகளில் பல்வேறறிஞர்கள் உலையாத் முயற்சி களால் பெரும் பெருநூல்கள் உண்டாயிருப்பினும், எண்ணரிய புதுக்கருத்துக்கள் தோன்றியிருப்பினும் அக்காலத்தில் மிகக் குறுகிய அளவிலேயே இந்நூல்களைப் பற்றிய உண்மைகள் தெரியவந்தன. அக்காலநூல்களை இக்காலத்துக் கண்கொண்டு பார்த்தல் முறைமையன்று. பொதுவாக உலகநூல், உயிர் நூல், உளநூல் முதலான பல்வேறு நூல்களில் கூறப்படும் உண்மைகளைப் பல்வேறு தோற்றத்தில் விரித்துக் கூறுவிடினும் அக்காலத்தில் அறியப்பட்ட விரிந்த உண்மைகளின் அடிப் படையான கொள்கைகளை (Fundamental Principles) மிகச் சுருக்க

மாக எடுத்துக் கூறியிருப்பதை எவ்வாற்றுனும் மறுக்கமுடியாது. ஆகவே, அக்கோட்பாடுகளை ஆங்காங்கு எடுத்துக் கூறலின், உலகநூல், உயிர்நூல், உளநூல் முதலியவற்றின் முதற்கோள்களை எடுத்துக்கூறி உதவுதலில் தொல்காப்பியம் மாறுபடவில்லை என்பது தெள்ளிதிற் புலனும்.

இனி, தொல்காப்பியத்தில் கடவுளின் தன்மை "வினையி னீங்கி விளங்கிய வறிவின்—முனைவன் கண்டது முதனூல்" என்ற சூத்திரத்தில் நன்கு விளக்கப்பட்டுளது. வேருேரிடத்தில், அக்கடவுளை வாழ்த்துவதும், அவருடைய தன்மை பொருந்தியனவாகக் 'கொடிநிலை, கந்தழி, வள்ளி' என்ற மூன்று பொருட்கள் உண்மையும், அவற்றை மக்கள் வணங்குவதும் வழக்கமெனக் கூறப்படுகின்றன. இவற்றுள் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் பெயரளவில் அறியக்கிடக்கின்றனவன்றி நூலைக்கொண்டு ஒன்றும் அறியக்கூடவில்லை. ஆனல் பிற்காலத்திய உரையாசிரியர்களும், தற்கால ஆராய்ச்சியாளரிற் சிலரும் தத்தமக்குத் தோன்றியவாறே உரைவரைந்து போவாராயினர். எனினும் திருத்தமான கருத்துக்கள் இனி எழும்வரையில் இவற்றை உண்மை எனக்கோடல் இயலாமை பற்றி வருந்துகிருேம். அன்றியும் தொல்காப்பியனர் கடவுட் கோட்பாட்டைப் போற்றிய, அரும்பெரும் முனிவராகத் திகழ்ந்தாராயினும் நூன்முகத்தில் கடவுள் வணக்கங் கூற வில்லை. பிற்காலத்தில் அம்முறையில் வணங்குவது பாராட்டப் பட்டதேயன்றி, அம்முறைதவறிய நூல்கள் இகழவும்பட்டன. எனினும் தொல்காப்பியத்தில் நூல்முகத்தில் கடவுள்வணக்கம் கூருமையின், அக்காலத்தில் அங்ஙனம் கூறுகின்ற வணக்கம் வழக்கிலிருந்ததாகத் தெரியவில்லை. இங்குத் தொல்காப்பியத்தை மட்டில் வைத்துக் கொண்டு இக்கருத்தை எங்ஙனம் முடிபுசெய்ய முடியும்? அழிந்துபட்ட பிறநூல்களில் கூறப் பட்டிருக்கலாகாதா? எனச் சிலர் கடாவுதல்கூடும். இவ் வினுக்கள் அமைவுடையனவாயினும், இருக்கின்ற நூலை வைத்துக் கொண்டு அதாவது தொல்காப்பியத்தைமட்டில் வைத்தாராயும் பொழுது அக்காலத்தில் நூன்முகப்பில் கடவுள்வணக்கம் கூறும் வழக்கு இல்லை என்பதே அறியக்கிடக்கின்றது.

இனி, அக்கால மக்களின் கற்புநிலை பெரிதும் பாராட்டற் குரியது. "உயிரினும் சிறந்தது நாண்; நாணினும் சிறந்தது கற்பு" எனப் பண்டைத் தமிழர்கள் கருதினர்கள். இதனைத் தொல்காப்பியம் மிக அழகாக எடுத்துக் கூறுகின்றது.

எனினும் தொல்காப்பியச் சூத்திரத்தினிடையிடையே பல வேறு வகுப்புப் பிரிவினைகளைக் கொண்டுவந்து கூட்டிவிட்ட உரையாசிரியர்களைப் பின்பற்றி, இக்கால ஆராய்ச்சியாளர் எனப்படுவாரொருவர் தாம் அவர்களினும் ஒருபடி மேற்போவா ராயினர். போகி, "மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்— கீழோர்க்காகிய காலமு முண்டே" என்ற கற்பியற் சூத் திரத்தின் பொருளைத் திரித்துக் கூறித் தமிழ்நாட்டினர் தத் தமக்கு வேண்டிய மகளிரை வலிந்தும் கொண்டு சேறலாம்— அதாவது கண்டோன் கண்டவளை இழுத்துச் செல்லலாம்— என்ற வழக்குடையராயிருந்தனரென்றும், ஆரியர்கள் தமிழர் களின் அவ்வகை நிகழ்ச்சியை ஒழித்துக் கற்பினைக் கற்பித் தனரென்றும் தமக்குத் தோன்றியவாறு வரைந்து விட்டார். ஏன்? என்ன? எவ்வாறு? எதற்காக? என்பனபோன்ற பல வினாக்களின் மூலம் எதைக் கூறினும், அதனைப் பகுத்தறியும் அளவுக்கு அறிவு முதிர்ச்சிபெற்று, காணாதன வெல்லாங்கண்ட அறிவியல் காலமாகிய இந்நூற்றாண்டில் கூட ஆரிய இருளை இந்நாட்டில் வலிந்து புகுத்தப் புகுந்த அவர்தம் பேதமைக்கு இரங்குவதன்றி வேறுவழியில்லை. இனி, ஆரியர்களுடைய நாகரிகத்தைச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால், இராமாயணம், பாரதம் போன்ற நூல்களின் மூலம் நன்கறியக்கூடும். அவற்றை உணர்ந்த உங்களுக்கு யான் ஒன்றும் மிகுதியாகக் கூறவேண்டியதில்லை. ஆரிய நாகரிகம் வெறுக்கப்பட்டமை யாலும், ஆரியர்களின் செல்வாக்குக் காரணமாக 4, 5-ஆம் நூற் றாண்டுகளில் தமிழர்கள் இருட்கடலில் மூழ்கியிருந்தபோழ்து, வடநாட்டினின்று வந்து தமிழ் நாட்டெல்லைகளில் வதிந்த பல வேறுகுடியினர் (கதம்பர், ஆந்திரர், பல்லவர், களப்பிரர் முதலி யோர்) தமிழ்நாட்டின் பலபகுதிகளைக் கைக்கொண்டு, வட நாட்டுப் பார்ப்பனர்களை இங்கு இறக்குமதி செய்தனர். ஏராள மான பொருட்செலவில் கோவில்கள் எடுத்து ஆரியமொழி கொண்டே பூசனை புரியக் கட்டளையிட்டனர். எண்ணிறந்த பொன்னையும், பொருளையும் தானமென்ற பேரால் வாரிவீசினர். சுருக்கக் கூறினால் ஆரிய மன்னர்களும், ஆரியர் செல்வாக்கும் இந்நாட்டில் தலைவிரித்தாடின எனலாம். இவ்வாறு தமிழர் நலங் குறைந்த காலத்தில், அதற்குக் காரணமான பல்லவர் களைப் "பல்லவர் கயவர் பதகர் நீசர்" என அக்காலத்தியற்றப் பட்ட பிங்கல நிகண்டின் ஆசிரியர் வைவாராயினர். ஆரியர் மிலேச்சர் என்றும் கூறப்பட்டது. ஆரியர்கள் இழிவாகக் கருதப்பட்டதோடு, அவர் தம் நாகரிகமும் புறக்கணிக்கப்

பட்டது. செல்வாக்கும், நாகரிகமும் மலிந்த பிற்காலத்தில் இங்ஙனங் கருதப்பட்டனரென்றால், பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பாக, அவர்கள் ஆடுமாடு மேய்த்துக் கொண்டு, முரச முழங்கும் பேரரசுகள் ஆண்ட இத்தமிழகத்தில் புகுந்த பொழுது அவர்கள் எந்தநிலையிலிருந்திருக்க வேண்டுமென நான் விளக்கிக் கூறவேண்டுவதில்லை. அங்ஙனமாகவும், சிறிதும் பொருத்தமின்றி ஆரியர் தமிழர்க்குக் கற்புக் கற்பித்தார் எனஒரு ஆராய்ச்சியாளர் எனப்படுவார் குறும்பாகக் கூறுவாரானால், அவருக்கு நம் மன்னிப்பைத் தான் காட்டவேண்டும். அத்தகைய நூலைப்பாடமாக மாணவர்கள் கற்பதும், கற்குமாறு செய்வதும் இரங்கத்தக்க வன்கண்ணார் செயலன்றி வேறில்லை.

எனவே, தொல்காப்பியம் இலக்கணமாத்திரமன்று, இலக்கியமாகவும் உதவுகின்றது. அதுமட்டிலல்ல; அதுஒருஉயிர் நூல், அது ஒரு உளநூல், அது ஒரு உலகநூல். துருவியாராயின் மற்றும் பலநூல்களின் அடிப்படையை விரித்துரைக்கும் ஒரு பெருநூல் என்றுகூறுவதில் எவ்வகை இழுக்குமின்று.

அத்தொல்காப்பியம் பிற்காலத்தில் மிகுந்த வழக்கொழிய நன்னூல் முதலியன தலைதூக்கியும், மீண்டும் அப்பழைய நூல் பண்டைய நிலைமை யடைதற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. இனி, அதனைப்பற்றி வாயாற் பேசுவது போதாது—புகழ்வது போதாது. அந்நூல்எழுதப்பட்ட தமிழே ஒவ்வொரு தமிழனும் —சிறப்பாக அத்தமிழால் வயிறுபிழைக்கும் ஒவ்வொரு தமிழாசிரியனும்—அதற்கு தற்காலத்தில் விளைந்துள்ள இன்னல் களைய, இன்னே முற்படவேண்டும். தொல்காப்பியம் வாழ்க! தொன்மைத் தமிழ்வாழ்க !!

'எலிமயிர்த்தொழில்'

(சீவக சிந்தாமணி—2680)

திரு. K. சோமண்ணு அவர்கள் B.A., B.L., தஞ்சாவூர்

காலவரையறை கடந்த பழங்காலத்தே தமிழ் முதுமக்கள் தொழிற்றுறைகளிலே தலைசிறந்து நிலவித் திகழ்ந்தனரென நலம்பழுத்தொழுகும் பழந்தமிழ்நூல்களில் பரக்கக் காண லாம். நல்லிசைத் தண்டமிழ்ப் புலவராய இளங்கோவடிகளும், தெள்ளுற்ற தீந்தமிழ்ப் புலவராய திருத் தக்கதேவரும் முறையே இயற்றிய முத்தமிழ்க் காப்பியங்களில்— "பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும், கட்டுநுண் வினைக் காருகர் இருக்கை" (சிலம்பு—இந்திர—16-17), "நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும், பால்வகை தெரியா பல்நூறு அடுக்கத்து, நறுமடி செறிந்த அறுவைவீதி" (சிலம்பு—ஊர்—205-07); "எலிமயிர்ப் போர்வைவைத் தெழினி வாங்கினர்" (சிந்தா—2471); எலிமயிர்த் தொழிற் பொங்கு பூம் புகைப் போர்வை" (சிந்தா—2680) "மயிரேலியின் போர்வை" (சிந்தா-1874); "செந்நெருப்புணும் சேவ்வேலிம் மயிர்க் கம்பலம்"—(சிந்த-2686)— "மயிரெலியின் போர்வை," "எலிமயிர்த் தொழில்" என்பன காணக் கிடைப்பதால், "எலிமயிர்" என்பது யாதெனவும், அத்தொழில் எத்தன்மைத் தெனவும் ஈண்டு நோக்கத் தக்கது.

இருவகை வழக்கினையும் அறிந்த அருண்மிக்க சிலப்பதி கார உரையாசிரியர், 'மயிர்' என்பதற்கு எலிமயிரென உரை கண்டுள்ளார். சிந்தாமணி உரையாசிரியர், கம்பலம் எனும் போர்வைக்குரிய ஆடை யொன்றே, எலியினின்றும் எடுக்கப் பட்ட மயிரால்நெய்யப்பட்டதெனும் குறிப்புபடஉரை தந்தார். இவற்றை ஆதாரமாகக்கொண்டு, 'எலிமயிர்க் கம்பலம்' (Blanket made of rat fur) என்பது எலிமயிரினுல் செய்யப்பட்ட கம்பளி என்றும் 'எலிமயிர்ப் போர்வை' என்பது (Shawl made of rat's fur) எலிமயிராற் செய்யப்பட்டபோர்வை' என்றும் அரசாங்கத்தார் அகராதியாகிய (Tamil Lexicon)ல் குறிப்பிடப் பட்டிருக்கிறது. மயிர் நூலினுல் நெய்யப்பட்ட கம்பளம் குளிர் மிகக்கொண்ட இடங்களில் பெரும்பாலும் இன்றியமையாது வேண்டப்படும்.

மற்றும் ஆடைக்குரியமயிர் செப்பமிட்டு ஆடைநெய்ய உதவும் மயிராக இருத்தல்வேண்டும். இதுகாறும் ஆடைக்குரிய மயிர், துருவையாடு, குறும்பாடு (Fleecy Sheep), பள்ளையாடு (Dwarf Goat) வரையாடு, (Mountain Sheep), செம்மறியாடு, (A sheep of reddish colour with little wool), காட்டாடு (Wild sheep) முதலிய ஆட்டு இனத்தின் மெல்லிய மயிராலன்றி எலியின் மயிரால் நெய்யப்பட்டதல்ல என்பது பண்டு தமிழ்வளம் விளக்கும் நூல்களில் பரக்கக் காணகிறோம். கூர்ந்து சிந்திக்குங்கால், எலியின் மயிர் ஆடைக் காவதன்று. ஆடைக்காவதெனின், மயிராடைக்காகப் பேமெலி ஈட்டங்களைப் பண்டையோர் பேணிவந்த வகையும், அம் மயிரினையெடுத்து நூல்நூற்கும் நுட்பத்தையும் சங்க நூல்கள் கூறிற்றில. ஆனால் எலிமயிரினைப் பற்றி சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதலிய பழந் தமிழ்நூற்களில் குறிப்பு காணப் படுவதால், எலிமயி ராடை யென்பது குளிர்நாடுகளில் வதியும் மக்கள் குளிரினை அகற்றிக்கொள்வதற்குரிய வெப்பங்கொண்ட மயிரினால் ஆக்கப்பட்ட ஓர் மேற்போர்வை அல்லது கம்பலம் அல்லது எழினி என்பதாகும். சீவகசிந்தாமணி யிடத்தே காணப்படும் 'எலி மயிர்' என்பதற்கு அதன் உரையாசிரியர், நூலாசிரியர் கருத்தொடு பொருந்த 'எலி' என்பது ஓர் பிராணி யெனக்கொண்டும், அதன் மயிரும் ஆடைக் காவதெனக் கொண்டும் உரைதந்தார். நெய்தற்கேற்ற மயிர்கொண்ட பிராணி செம்மறி ஆடென இதுகாறும் அறியநேர்ந்ததால் எலியென்பது யாதெனக் காண்குவம்.

பழந் தமிழ் நூல்களில் உரையாசிரியன்மார் உரைகாணு மிடத்து 'இன்னனைய சொற்கள் இக்காலத்தே வழக்கு வீழ்ந்து இறந்துபட்டன' எனப் பலபடக் கூறியிருப்பதால் 'எலி' எனும் சொல் வழக்காறின்றி இறந்துபட்டதோ என ஐயம் எழுவது இயல்பே. மேலும் 'எலி' என்பதற்கு பொதுப் பொரு ளுங் காரணமும் தெரியாதவழி, ஒரோவழி 'மொழி பல பெருகிய பழி தீர் தேஎயத்துப், புலம்பெயர் மாக்கள்' தமிழ் முதுமக்களுடன் கலந்தினிதுறைந்த உறவு, நாட்பலசெல்ல, காழ்ப்பேறிப் பழமையானதாதல்பற்றி 'எலி' என்பதுவேற்றுப் புலமொழியாக விருக்குமோ என்ற அயிர்ப்பு உண்டாவதும் இயற்கையே; அல்லது ஏட்டுப் பிரதி நோக்கி எழுதுவோர் மூல பாட பேதம் கண்டு சொற்களின் வேறுபாடு காண முடியாதது பற்றி திருத்தி எழுதி விட்டனரோ என்று ஊகிக்கவும் இட மிருக்கின்றது. மற்றும் 'எலி' எனும் சொல் இயற் சொற்போல்

இயல்பால் உணரப்படாது அரிதாகக் கற்ரோர் அறியும்பொருளை, யுடைத்தோ என்று உண்மை யறிவுபெற விழைந்து ஆராய் வார்க்கு ஒரு தலையால் ஐயஞ்செல்லும்.

பெரும் புலவர்களாக்கிய செய்யுட்களின் பொருளினையும், சிறப்பினையும் சிறிதளவேனுந் தெரிந்து இன்புறுதற்கு இணை யற்ற கருவியாயிருப்பது அவர்கள் கையாண்ட சொற்களை ஆராய்ந்தறிதலென்பது. பல கேள்வித் துறைபோகிய தொல் லாணைப் புலவர்களாகிய இளங்கோவடிகளும், திருத்தக்க தேவரும் இலக்கியச் சுவை நனிசொட்ட இயற்றிய நூல்களில் பெரும் பான்மையும் பொருளாழமுடைய குறிப்புச்சொற்களும் பொருள்களும் விரவி வருதலான், அப்புலவர்கள் தம் தூய அறிவு உலக இயற்கையழகிற்படிந்து அதன் வண்ணமாய்த் திரிந்து, அன்னார் தம் மனத்துதித்த சீரியகருத்துக்கள், சொற்கள் மூலமாகத் தெளிவுற்று விளங்குங்கால், உண்மையறிவுடையார் சொல் வளம் பழுனிய அவ்வுயரிய கருத்துகளை அறியவே அவாவுவார். சிந்தாமணியார் தம்செய்யுட்களில் பன்முறை 'எலி' என்ற சொல்லை வழங்கிவந்ததிலிருந்து அவர் 'எலி' விலங் கினத்தைச் சார்ந்ததெனக்கொண்டு எழுதினரென்று தெரிய வருகிறதே யல்லாது, படிப்போர் வழுவாகத் திருத்தி எழுதி விட்டனரென்று துணிந்து கூறுதற்கில்லை.

என்னெனில் 'எலி' என்ற பதத்திற்குப் பிரதியாகவேறு சொல்லிருந்தாக வேண்டுமெனக் கொள்ளுதற்கு இடமேற்படும். அவ்வாறு வேறு சொல்லிருந்ததாகவும், பாடபேதம் இருந்த தாகவும் இதுகாறும் தெரியவில்லை யாதலான் பிரதிசெய்வோர் திருத்திஎழுதி யிருப்பரென்று குறைகூறுவது குருடன் கண்ட யானைக் கதையாகமுடியும். மற்றும் ஐயுறுதற்கு ஏதுவாய் 'எலி' எனும் மொழிக்கு நெகிழ்ந்துரை கூறிப்போதல் முறையன்றாம். இஃது இயையாத நெறியாமென்க.

சிந்தாமணிச் செய்யுள்களிலும் சிலப்பதிகாரத்து இரண் டோர் அடிகளிலும், பெருங்கதையிலும், எலிப்பூம்போர்வை யைப்பற்றிக் குறிப்பு காணப்படுகிறதேயொழிய இஞ்ஞான்று வழங்கிவரும் மற்றைய தமிழ்ச் சங்க இலக்கியங்களில் எலி மயிராடையைப்பற்றி யாதொரு குறிப்பினையும் காண்கின் றிலேம். அதனான் 'எலி' எனும் பதம் பண்டறி வழக்கின் பாற்பட்டதெனக் கொண்டு, அம்மொழி, காரணங் கருதாது இடையில் ஆக்கப்பட்டதாதலின், மேற்கண்ட நூல்களில் மட்டும் சிறுவரவினதென்ப துணர்க.

கம்பலம் நெய்யப்படுவதற்குரிய மயிரினையுடைய துருவ 'யாட்டின் ஏறு, ஏழகம்' எனப்படுமென்பது 'மேழகங்கம்பளந் தகரே திண்ணகம், ஏழகங்கடா 'துருவாட்டினேறே' என்ற பிங் கலந்தை வரிகளால் அறியப்படும்.

'அருணஞ் செம்மறியே மோத்தை யசமுத ளுடுவே கொச்சை
துருவையேழகம் வற்காலி துள்ளலே பள்ளை வெள்ளை
வருடைமேடங் கடாமைமறி வெறி கொறியே சாகம்
யுருவையேதகர் மூவேழு மிரண்டு மாட்டின் பொதுப்பேர்'

என்பது சூடாமணி.

'மேழகம்' என்பது தொன்மை சான்றதோர் தூய தனித் தமிழ்மொழிச்சொல்; யாட்டின் பெயராகிய 'மேழகம் என்ற மொழி பின் 'ஏழகம்' என மாறிற்று. இச்சொல் நாளடைவில் வழக்குஅருகிச் சிதைந்தொழிந்து, உலகத்து முதன் முதலுண் டான இயற்கைமொழியாகிய தமிழினின்றுண்டான வழிமொழி களாகிய துளுவம், பாளி போன்ற பிறமொழிகளில் 'ஏளு, ஏலு, (ஏலு = காடி) எலி' என நிலைகெட்டுப் பிறழ்ந்து வழங்கி பின்பு தமிழ்ச் சொற்களின் நிலைக்களனைப் பற்றிக்கொண்டு திசைச்சொல்லாய் நிலைபெற்று வழங்கியது. செப்பமிட்டு ஆடை நெய்ய உதவும் மயிரினைக்கொண்ட 'எலி' செவ்வெலி என வாயிற்று. இதனையே சிந்தாமணியாரும் 'செவ் வெலிம் மயிர்க் கம்பலம்' எனக் குறித்திருக்கிறார். செவ்வெலி (Gerbillus Indicus) முற்காலத்தேயிருந்து இதுபோது இறந்துபட்டிருக்கலாமென்று சிலர் எளிதே எண்ணி எதிருரைக்கலாம். (சீவரட்சாமிருதம்— 364) ஆனால் அத்தகைய எலி இருந்தமையும், இறந்தமையும் ஓரிடத்தில் ஒரு காலத்தில் நடைபெறாதாதலின், அது எத் தன்மைத்து? அது யாண்டு கூட்டங் கூட்டமாய் வாழ்ந்தது? அதன் உருவம் யாது? என்பனவற்றிற்குத் தக்க சான்றோடு நிலையாய பழைய தமிழ்ச்சங்க நூற்களிலிருந்து உண்மையினை நன்கறிந்து எடுத்துக் காட்டாதவரை, அவ்வெதிருரை, மாண் புடைப் பொருளைக் கொண்டதாகத் தோற்றவில்லையாதலான், ஏற்புடைத்தன்று. 'செவ்வெலி' என்ற மொழி பின் 'செவ் வரி' யாகவும் பின் 'செம்மலி' யாகவும் திரிந்து பல்லாண்டாக பேச்சு வழக்கிலே செம்மறியென நிலைத்துவிட்டது. மற்றும் செவ்வரியாடு என்ற ஆட்டின் வகை தமிழகத்தேயிருந்து வந்த தாகக் கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது. (South Indian Inscriptions. Vol, 5, 265). இன்றும் சிங்களநாட்டார் செம்மறியைச் 'செம்மலி' என்று வழங்குவர். செந்தமிழ்நிலத்து வந்து

வழங்கும் இதுபோன்ற சில சொற்கள் இவ்விவையென ஈண்டெடுத்துக் கூறுதல் முறையாம். அருவா நாட்டார் வயலைச் செறு வென்றும், சிறுகுளத்தைக் கேணி யென்றும்; அருவாவட தலையார் புளியை எகின் என்றும்; பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழி என்றும்; குட்டநாட்டார் தாயைத் தள்ளை யென்றும்; சோழநாட்டார் தாயை ஆய் என்றும்; குடநாட்டார் தந்தையை அச்சன் என்றும்; கற்காநாட்டார் வஞ்சரைக் கையர் என்றும்; வேணாட்டார் தோட்டத்தைக் கிழார் என்றும்; சீதநாட்டார் தோழனை எலுவன் என்றும்; தோழியை இகுளி யென்றும்; மலைநாட்டார் நீரை வெள்ளம் என்றும்; தென் பாண்டிநாட்டார் பசுவினைப் பெற்றமென்றும்; சோற்றைச் சொன்றி யென்றும் வழங்குவர். ஆகவே 'எலி' எனும் சொல் யாட்டைக் குறிக்குமென்றும், 'எலிமயிர்' என்பது ஆடைக்குரிய ஆட்டினத்தின் மயிர் என்றும், மற்றும் அச்சொல் பொருளற்ற புன்சொல் அல்லவென்பதூம் பெறப்பட்டது. பண்டை ஆசிரியர்களின் வழக்காற்றினை ஆய்ந்துபாராது பல மொழிகளை ஒரு சிலர் தம் விருப்பின்படி திரித்துக்கொண்டு தமக்குத் தோன்றியவாறே பற்றித் துணிந்துரைக்கு முறை முற்றும் போலி யுரையாவதன்றி மற்றென்னை?

விண்ணப்பம்

அன்பரீர்'

நலம்; கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய "தமிழ்ப்பொழில்" இறைவன் திருவருளாலும், தமிழன்பர்களின் பேருதவியினாலும் பதினான்கு ஆண்டுகளாகத் தமிழ்ப்பணியாற்றி வருகின்றது.

இதன் எதிர்கால வாழ்வு கட்டுரை வழங்குவோர், இதழன்பர்கள் என்னும் இருதிறத்தினராகிய தமிழன்பர்களின் கையிலிருக்கின்றது.

பல அன்பர்கள், எளிய நடையில் எழுதப்பெறவில்லை யென்றும், புதுவதான கருத்துக்கள் (Modern thoughts) இதன்கண் வருவதில்லை யென்றும் குறைகூறித் தமது பொறுப்பைக் கழிக்கின்றனர்.

குறைந்த எண்ணினரே இதழுறுப்பினராயிருப்பதால் பொழிலை வளனுறச் செய்தற்கியலாதிருக்கின்றது. ஆண்டுதோறும் கைப்பொருளை இழந்தும் வருகின்றோம். என்றாலும் சங்கத்தார் ஊக்கந் தளராது தமிழ்ப் பொழிலைப் போற்றி வளர்த்து வருவது போற்றத்தகும் செயலாயிருக்கின்றது. புத்தாண்டினில் அன்பர்கள் பலரும் உறுப்பினராகச் சேர்ந்தும், உறுபொருள் கொடுத்தும், புதுக்கருத்துடைக் கட்டுரைகள் எழுதியும் எவ்வாற்றானும் ஆதரித்து ஊக்குதல் வேண்டப்படுகின்றது.

கட்டுரை வழங்குவோர் நினைவில் வைக்கவேண்டிய செய்திகள் சிலவற்றை விளக்க விரும்புகின்றேன்:

1. கட்டுரைகள் தெள்ளத்தெளிந்த தீந்தமிழ் நடையில் விழுமிய பொருளை விளக்கமுற எழுதப்பெற்றனவாதல்வேண்டும்.
2. தமிழ்ப்பொழில் பக்கம் நான்கிற்குமேல் தொடராது கட்டுரை முடிவுபெறவேண்டும். நீண்ட பொருளாயிருக்குமாயின் இக் கூறிய அளவில் முடியும் சிறுபிரிவுகளாய் வகுத்து எழுதப்பெற வேண்டும்.
3. தமிழ்ப்பொழில் வெளியிடுதற்கனுப்பப்பெறும் கட்டுரைவேறெந்தத் தாளிலும் வெளிவந்திருக்கவும், வெளிவரவும் கூடாது.

இவையன்றி மற்றொரு விண்ணப்பமும் உண்டு

சிறந்தமுறையில் தமிழ்மொழி, தமிழிலக்கிய இலக்கணம், தமிழ்ப் புலவர் வரலாறு, சுவைமலிந்த தனிப்பாடல்கள், மொழி பெயர்ப்புகள், வெளிவராதிருக்கும் அரிய நூல்கள், கலைப் பொருள்கள், புதிய கருத்துரைகள் இவைபோல்வன பிறவும் எழுத வல்லவர்களை எழுதுமாறு ஊக்கவேண்டும்; எமக்கும் அவர்களை அறிமுகப்படுத்தவேண்டும்; தத்தமக்குத்தெரிந்த அன்பர்களைப் பொழிலுறுப்பினர்களாகுமாறு தூண்டவும்வேண்டும்.

இவ்வாறான உதவிகள் ஞாலத்தின் மாணப்பெரியனவாய்ச் சங்கத்தாரால் நன்றியுடன் மதிக்கப்பெறும்.

க. த. சங்கம்; 27—5—39.

இங்ஙனம்,
பொழிற்றொண்டன், த. வே. உமாமகேசுவரன்.

பெருந்தகையீர்,

நலம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாவில் தமிழ்நாடு பொதுவாகவும் தாங்கள் சிறப்பாகவும் புரிந்த பேருதவியால் சங்கத்தின் புகழ் வளர்ந்தது; புலவர் கல்லூரியும் தோற்றியது. தொடக்க வகுப்பு ஒரு ஆண்டு வேலைசெய்தது. நுழைவுத் தேர்வில் (Entrance Examination) தேறிய மாணவர் புலவர் I-வது வகுப்பிலும், புதிய மாணவர் தொடக்க வகுப்பிலும் சேர இருக்கின்றனர். இவ்வாறாக ஆண்டுதோறும் மாணவர்கள் சேரவும் ஐந்து வகுப்புகள்வரை வைத்து நடத்தவும், பொருள் வசதிகளைத் தேடிக்கொள்ளவேண்டிய நிலையிலிருக்கின்றோம். இந்த ஆண்டில் இரண்டு வகுப்புகள் நடத்த ரூபா 2500 ஆகிலும் வேண்டும்.

தமிழ் நாட்டின் எல்லைக்குள் இருபதின் மேற்பட்ட வடமொழிக் கல்லூரிகள் வளனுடன் நடைபெறுகின்றன. தமிழ்மொழிக் கல்லூரிகள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. ஆங்கும் வேற்றுமொழியினருக்குப் பெருமதிப்பும் தமிழ்ப் புலமையோர்க்கு மதிப்பின்மையும் கண்கூடாயிருக்கின்றது.

வங்காளியர், மராட்டியர், தெலுங்கர், கன்னடர், இசுலாமியர் முதலியோர் தத்தம் மொழிகளைப் பேணி வளர்ப்பதைப் பார்த்தும், தமிழறிஞர் வாளாயிருப்பது ஏழைமையன்றோ?

ஆதலால், தமிழ்மொழி ஆக்கத்தில் கருத்துடைய நீங்கள் இவ்விண்ணப்பங் கண்டதும் இயன்றபெற்றி பணவுதவி செய்யுமாறு விண்ணப்பிக்கின்றேன். தங்கள் நண்பர்கட்கும் இதனை அறிமுகஞ்செய்து உதவி செய்யத் தூண்டவும் வேண்டுமென வேண்டுகின்றேன். ஆண்டுதோறும் இத்தகைய உதவி நாடப்பெறும். ஆவன செய்து எம்மை இவ்வரும்பணியில் ஊக்குவீராக.

ஒரு மாணவரின் உணவு, உறையுள், கல்வி
முதலியவற்றின் ஒரு ஆண்டுச் செலவு ரூ 75
(அல்லது)
ஆண்டு நன்கொடை குறைந்தது .... ரூ 10
(அல்லது)
ஆண்டு நன்கொடை .... ரூ 1-க்குக் குறையாது,

எவ்வகையிலேனும் பணவுதவி செய்து எமது தமிழ்ப் பணியை நலனுறச்செய்யுமாறு விண்ணப்பிக்கின்றேன்.

க. த. சங்கம்,
1—6—39.

த. வே. உமாமகேசுவரன்,
தமிழ்த்தொண்டன்.